DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1474 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 5, 2024

# "ரொறன்ரோவில் அனைத்து தமிழ்க் குடும்பங்களையும் உள்ளடக்கிய எமது சமூகத்தின் பங்களிப்போடே. ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தை' கட்டி எழுப்ப விரும்புகின்றோம்"

## ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்திற்கான நிதி சேகரிப்புக் குழுவின் சார்பில் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவிப்பு



"ஸ்காபுறோ நகரில் எமது சமூகத்திற்காக அமையவுள்ள தமிழச் சமூக மையம் பற்றி எமது கனடா வாழ் தமிழர்கள் அனைவரும் அறிந்திருப்பார்கள் என்பது எமது நம்பிக்கை. இந்த விடயத்தில், ரொறன்ரோவில் வாழுகின்ற அனைத்து தமிழ்க் குடும்பங்களையும் உள்ளடக்கிய எமது சமூகத்தின் பங்களிப்போடே. ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தை" கட்டி எழுப்ப தற்போது மிக வேகமாகவும் விவேகமாகவும் செயற்படும் அமைப்புக் குழுவினராகிய நாங்கள் விரும்புகின்றோம். எனவே இங்கு வாழும் தமிழ்க் குடும்பங்கள் அல்லது தனி நபர்கள் ஆகியோரில் சுமார் 2500 பேரிடமிருந்து நாங்கள் பத்தாயிரம் டாலர்களை பெற்றுக் கொள்வதன் மூலம்ம் நாம் 25 மில்லியன் டாலர்களை சேகரித்து எமது திட்டத்தை நாம் பூரணமாக கட்டி முடிக்கலாம் என்று நம்புகின்றோம்"

இவ்வாறு நேற்று புதன்கிழமையன்று மார்க்கம் ந கரில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பு நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்திற்கான நிதி சேகரிப்புக் குழுவின் சார்பில் வர்த்தகப் பிரமுகர் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவித்தார். (தொடர்ச்சி 22ம் பக்கம்)

# ஸ்காபுறோ நகரில் திறந்து வைக்கப்பெற்ற 'விஜயா நகை மாளிகை' தங்க ஆபரண விற்பனை நிலையம்

ஸ்காபுறோ நகரில் கடந்த 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று 3341 **Markham Road - Unit 127-Scarborough (MARKHAM & STEELES )** என்னும் விலாசத்தில் திறந்து வைக்கப்பெற்ற "விஜயா நகை மாளிகை" தங்க ஆபரண விற்பனை நிலையத்தின் திறப்பு விழாவில் அதன் உரிமையாளர்கள் யுகநீதரூபன்-விஜயதர்சினி தம்பதியின் அழைப்பை ஏற்று ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சர் ரேமன்ட் சோ அவர்களும் துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

அத்துடன் அவர்கள் இருவரும் நிறுவனத்தின் வாசலில் கட்டப்பெற்றிருந்த "நாடாவை" வெட்டி "விஜயா நகை மாளிகை" தங்க ஆபரண விற்பனை நிலையத்தையும் திறந்து வைத்தனர்.
(தொடர்ச்சி 13ம் பக்கம்)




தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8


Thamil Isai Kalaamanram of Ontario
Presents
Isai Vizha
2024
Commences with a Homage to
Saint Thiyagaraja
A 2-DAY EVENT
July 13 & 14, 2024
From 9:30am. to 8:00pm.
We will have music concerts
throughout the two days
Admission is free for all
All musicians, rasikas and music lovers
are cordially invited.
Tamil Arts Auditorium
3-1120 Tapscott Road,
Scarborough, Ontario M1X 1E8
Phone: 416-724-2466 www.thamilisai.org


முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை
13வது ஆண்டாக நடாத்தும்
ஊட்டும் கரங்கள்
தமிழும் இசையும்
இராப்போசன விருந்தும்
இன்பத் தமிழ்ப் பேச்சு
சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும்
நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர், சொல்லின்
செல்வி, மொழி அரசி, , பேராசிரியை
பர்வின் சுல்தானா
நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்
Zee தமிழ் சரிகமப புகழ்
கோபாலகிருஷ்ணன்
கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்
இன்னிசை மாலை
அன்பளிப்பு
$150
VIP
$100
70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்க்கு மட்டும்
$75
யூலை 28, 2024
ஞாற்றுக்கிழமை - 5:30PM
METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)
தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# நம் தாய் மண்ணில் ...

## பாமர மக்களின் வாழ்க்கைக்கு வறுமை தடையாக!...

## கற்றவர்கள் கடமைகளை மீறுகின்றார்கள்!...

## அரச அதிகாரிகள் அதிகார துஸ்பிரயோகம் செய்கின்றார்கள்!

இவ்வாரத்தில் உலகெங்கிலும் இருந்து எமக்கு கிடைத்துள்ள பல செய்திகள் மற்றும் தகவல்களைப் படிக்கும் உள்ளம் பூரிப்படைவதிலும் பார்க்க மனது தளர்கின்றது. பதட்டம் அதிகரிக்கின்றது.

கனடாவில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் கனடியத் தமிழ் மக்களுக்காக ‘தமிழச் சமூக மையம்’ ஒன்றை நிறுவுவதற்கான பணிகளில் ஐம்பதுக்கும் மேற்படி தமிழ் அன்பர்கள் தங்கள் நேரத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தி இயங்கிவருகின்றார்கள். பெருமளவு நிதியைச் சேகரிப்பதற்காக திட்டங்கள் தீட்டி சுமார் 25 மில்லியன் கனடிய டாலர்களை திரட்டுவதற்கான பணிகளை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர்.

ஆனால் இலங்கை என்னும் மாங்கனித் தீவில் வடக்கிலும் தெற்கிலும் குழப்ப நிலைதான். தனது வாழ்வின் இறுதிவரை தென்னிலங்கை அரசியல்வாதிகளோடு முரண்படாமலும் பாதிக்கப்பட்ட மக்களை பார்க்கசுவும் பிடிக்காமலும், தமிழரசுக் கட்சி என்ற நீண்ட கால அரசியல் கட்சியை காப்பாற்ற முடியாதவராய் இயற்கை மரணத்தைத் தழுவிய இரா. சம்பந்தரின் இறுதிக் கிரியைகளை அரசாங்கத்தின் செலவில் செய்வதற்காக கொழும்புத் தலைமை தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. நான்கு திசைகளிலிருந்தும் அரச உத்தரவுகள் பறந்த வண்ணம் உள்ளன. தங்கள் நன்றிக் கடனைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி அலுவலகம் முதல் பிரதமர் அலுவலகம் வரை சிரத்தை எடுத்து சம்பந்தர் அவர்களை வழியனுப்பி வைக்கக் காத்திருக்கின்றார்கள்.

மறுபக்கத்தில் ஜனாதிபதி தேர்தலை ஒத்தி வைத்து, அந்தப் பதவியின் மூலம் தனக்கு கிடைக்கும் அதிகாரத்தையும் ஆடம்பர வாழ்க்கையையும் தொடர நினைத்து திட்டங்கள் தீட்டும் ரணில் விக்கிரமசிங்கவின் “ஆசை’ நிறைவேறுவதற்கு பக்க பலமாக நின்று செயற்படும் அவரது தமிழ்-சிங்கள- இஸ்லாமிய “சகாக்கள்’ தங்களுக்கு கிட்ட வேண்டிய சன்மானங்களுக்காகவும் காத்திருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

அதற்கும் மேலான துயரம் தரும் செய்திகள் நம் தமிழர் தாயகமான வடக்கில் அரங்கேறியுள்ளன. பணம் மீது கொண்ட வெளியினால் எமது சமூகத்தில் கற்றவர்கள் அல்லது உயர்ந்தவர்கள் என்று மதிக்கப்படும் வைத்தியர்களும் சட்டத்தரணிகளும் ‘துணிந்து’ செய்யும் அநியாயங்களும் அராஜகங்களும் அரங்கேறிய வண்ணம் அங்கு ‘அசிங்கமான’ சம்பங்கள் இடம்பெற்றுவருகின்றன. பாமர மக்கள் படித்தவர் என்று மதிக்கும் கூட்டம் பணத்திற்காக சண்டை போடுவதை அங்கு சாதாரண மக்கள் ஓரமாய் நின்று பார்த்து வியந்தும் சிரித்தும் வீதிகளைக் கடக்கின்றார்கள். வைத்தியப் பெருந்தகைகள் ‘சிறு சண்டியர்கள்” போல தாக்குதல்களை நடத்தும் அளவிற்கு அங்கு சம்பாத்தியம் தொடர்பான போட்டிகள் தோன்றியுள்ளன என்பது தெளிவாகின்றது.

இறுதியாக இதயத்தை தாக்கும் இன்னும் ஒரு செய்தி. யாழ்ப்பாண நகரத்திலிருந்து வடக்கில் அமைந்துள்ள இடத்தில் இயங்கிவரும் பெண்கள் காப்பகம் ஒன்றில் விசமிகளின் செயலால் பாதிக்கப்பட்டுள்ள அந்த பெண்களுக்கான காப்பகத்தை உடனடியாக மூடும் வண்ணம் உத்தரவு இட்டுள்ள மற்றுமொரு பெண் அதிகாரியான வடக்கு மாகாணத்தின் ஆளுனர் அவர்கள் அந்த காப்பகத்தில் உள்ள இளம் பெண்களை அரசாங்கம் பொறுப்பெடுத்து அந்தச் அபலைப் பெண்களுக்கு நம்பிக்கை ஊட்டவல்லை நடவடிக்கைகளை எடுப்பதாக இன்னும் எமக்கு செய்தி ஒன்றும் வந்து சேரவில்லையே?

இவ்வாறான பல துன்பியல் நாடகங்கள் எழுந்து நின்று தாண்டவமாடும் நமது தமிழ் மண்ணை நாம் எவ்வாறு அழைப்பது இனிமேல்?

**For All your Renovation Needs!**

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
**416-706-8160**

**Condo for Rent**

ஸ்காபுறோவில் **Warden & Finch** சந்திப்புக்கு அருகில் **3 Bedrooms,** விசாலமான **Living Room, Store Room, 2 Bath Room, Balcony,** உடன் 01-07-2024 தொடக்கம் வாடகைக்கு உண்டு.
இலவச வாகன தரிப்பிடம் மற்றும் இலவச கேபிள் மற்றும் **24 Hr Security, Party Hall, Out Door Pool, 24 Hrs Bus Srvice, Shopping Mall, Temple, Banks, Grocery Shops,** அனைத்தும் மிக அருகில்
**Call:** 416.897.0083

**ஒரு சோடிக் குத்துவிளக்குகள் விற்பனைக்குண்டு**

வீடுகளில் காட்சிப் பொருளாகவும் பாவிக்கக் கூடிய அழகிய ஒரு சோடிக் குத்துவிளக்குகள் உடனடியாக விற்பனைக்கு உண்டு.
விலையை பேசித்தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு :- 647 339 401

# நம்பிக்கை நிறைந்தது எமது எதிர்காலம் என்கிறார் கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவர் குமார் இரத்தினம்

-----------------------------------------------------------------------



நம்பிக்கை நிறைந்தது எமது எதிர்காலம் என்ற தலைப்போடு கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள குமார் இரத்தினம் அவர்கள் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

ஒரு கணக்காளராகவும் பன்முக ஆளுமை கொண்டவராகவும் விளங்கும் குமார் இரத்தினம் அவர்கள் 1993ம் ஆண்டு கனடாவில் ஆரம்பிக்கப்பெற்று மிகக்குறுகிய காலத்தில் தமிழ் மக்களின் செல்வாக்குள்ளதாக விளங்கிய “சூரியன்“ வாரப் பத்திரிகையின் வெளியீட்டுக் குழுவில் முக்கிய பங்கு வகித்து அதன் வெற்றிக்கு ஊன்று கோலாகவும் விளங்கினார்.

இவரது தந்தையாரும் கொழும்பில் ஒரு அனுபவம் பெற்றி ஊடகவியலாளராக விளங்கினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அவரது செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---------

கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவராக பொறுப்பேற்றுக் கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். 2009 முதல் நான் பேரவையின் உறுப்பினராகவும் தன்னார்வத் தொண்டராகவும் இருந்து வருவதில் பெருமையடைந்து, எமது சமூகத்தில் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்திய பல வெற்றிகளுக்கு சாட்சியாகவும் பங்களித்துமிருக்கின்றேன்.

இருப்பினும், எமது பேரவை சமீபத்தில் சில சவால்களை எதிர்கொண்டிருந்தது. செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் வலுவான குரலின் தேவை பற்றிய உங்கள் கருத்துக்களை நான் புரிந்துகொண்டிருக்கின்றேன். வெளிப்படைத்தன்மை, ஒத்துழைப்பு மற்றும் நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்திட்டங்களால் கட்டமைக்கப்படவுள்ள புதிய நாளையை வழிநடத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

எமது எதிர்கால குறிக்கோள்கள்:

-------------------------------------------

உங்கள் குரலை அனைவரும் கேட்கச்செய்வது: அதிக செயல்திறனுக்கான குழுச்செயல்பாடுகளுக்கு அதிகாரமளிப்பதன் மூலம், கனடா, இலங்கை மற்றும் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் மிகவும் சக்திவாய்ந்த அமைப்பாக மாறுவோம்.

வெளிப்படைத்தன்மையை பேணுதல்: எங்களின் புதுப்பிக்கப்பட்ட இணையதளம், சமூக ஊடகம் மற்றும் புதிய மின்னஞ்சல் செய்திமடல் மூலம் அனைத்து தகவல்களும் சிறந்த முறையில் அனைவருக்கும் தெரிவிக்கப்படும். கூடுதலாக, மெய்நிகர் கருத்து பரிமாற்ற சந்திப்புக்கள் மற்றும் ஆய்வுகள் மூலம் அனைவரது கருத்துக்களும் கருத்தில் கொள்ளப்படும்.

நிலையான வாய்ப்புகளை உருவாக்குதல்: எங்கள் சமூகத்திற்கான பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகளில் நீண்டகால நிலைத்தன்மை மற்றும் முதலீட்டை உறுதிசெய்து, வலுவான ஆதார உத்திகளை உருவாக்க, கூட்டாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றுவோம்.

உறுப்பினர்களுடனான தொடர்ச்சியான ஈடுபாடு: உடனுக்குடனான தகவல் பரிமாற்றங்கள் மூலம் அனைத்து பேரவையின் முன்முயற்சிகள், அதன் ஆணைகள் மற்றும் செயற்திட்டங்கள் யாவும் அனைத்து அங்கத்தவர்களுக்கு முறையாக தெரிவிக்கப்படுவதை உறுதி செய்வோம்.

எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்:

-----------------------------------------------

இது கனடிய தமிழர் பேரவைக்கான புதிய அத்தியாயம், உங்களின் பங்கேற்பு எங்களுக்குத் தேவை. எங்களுடன் உங்களை இணைத்துக்கொள்ள:

புதுப்பிக்கப்படவுள்ள தகவல் தொடர்பு வழிகள் மூலம் எங்களுடன் இணைந்திருங்கள்.

உங்கள் குரலைப் பகிர்ந்துகொள்ளுங்கள்: கருத்து மன்றங்கள், இணையத்தள விவாதங்கள் மற்றும் கருத்துக்கணிப்புகளில் பங்கேற்கவும்.

உங்கள் திறமைகளை எமது சமூகத்துடன் பகிர்ந்துகொள்ளுங்கள்: எங்கள் சமூக செயற்திட்டங்களில் உற்சாகமான தன்னார்வ வாய்ப்புகளை நாங்கள் வழங்குவுள்ளோம்.

ஒன்றாக இணைந்து, வெளிப்படைத்தன்மையோடு செயற்படும்போது, திறமையான முடிவுகளை வழங்கும் வலுவான, மிகவும் பயனுள்ள பேரவையை உருவாக்க முடியும். கனடிய தமிழர் பேரவையானது தமிழ்ச் சமூகத்திற்காக ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக விளங்கும் மரபைக் கொண்டுள்ளது. இதை தொடர்ந்து கொண்டுசெல்வதற்கும், நாம் சேவை செய்பவர்களுக்காக குரல் கொடுப்பதற்குமான எதிர்காலம் இப்போது நம் கைகளில் உள்ளது.

இந்த பயணத்தில் எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள். ஏதேனும் ஐயப்பாடுகள் இருந்தால் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டு பதில்களை பெற்றுக்கொள்ளலாம்.

நம்பிக்கை நிறைந்தது எதிர்காலம்.

நன்றியுடன்,
குமார் இரத்தினம்
தலைவர், கனடிய தமிழர் பேரவை

.இவ்வாறு மேற்படி செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஈழத் தமிழர்களின் மூத்த தலைமையின் உருவேயான இரா. சம்பந்தன் தனது 91ஆவது வயதில் 30-06-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் மறக்க முடியாததும் மறுக்க முடியாததுமான மிகப்பெரும் தூணாகத் திகழ்ந்தவர் இராஜவரோதயம் சம்பந்தன் (Rajavarothiam Sampanthan) அவர்கள். என்றால் அது மிகையாகாது.

உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் 30-06-2024 ஞாயிறு அன்று இயற்கை எய்தினார்.

சுதந்திரத்திற்கு பின்னரான ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றிலும், உரிமை கோரிய ஈழ விடுதலைப் போராட்ட காலம் மற்றும் ஆயுத போராட்டம் மெனிக்கப்பட்டதன் பின்னரான காலத்திலும் ஈழத் தமிழ் மக்களிடத்தினின்றும் அவர் சார் அரசியலினின்றும் பிரிக்க முடியாத ஒரு ஆளுமையாக சம்பந்தன் அவர்கள் இருந்திருக்கின்றார். என்பதை பல அரசியல் டிதலைவர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனாலும் ஆழமான தமிழ்த் தேசிய சிந்தனை கொண்ட இளைய தமிழர்களால் அவர் இறுதி வரை வெறுக்கப்பட்டே வந்தார் என்பது இதற்கு பல காரணங்கள் உண்டு என்பதும் கவனிக்கத் தக்கது.

எனினும் விமர்சனங்களுக்கு அப்பால் தன்னுடைய காலத்திற்குள் ஈழத்தமிழர்களுக்கு அரசியல்சார் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையில் மிகத் தீவிரமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டது மாத்திரமின்றி இறுதிவரை அதே கொள்கையில் உறுதியாகவும் நின்று இயற்கை மறைவினால் இறந்து போயிருக்கின்றார்.



1933ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி திருகோணமலையில் பிறந்தவர் சம்பந்தன். சம்பந்தன் யாழ்ப்பாணம் பத்திரிசியார் கல்லூரி மற்றும் மொரட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கல்வியை தொடர்ந்து சம்பந்தன் சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று வழக்கறிஞரானார்.

1972 ஆம் ஆண்டில் இலங்கையின் முக்கிய தமிழ் கட்சிகளான தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற கட்சிகள் ஒன்றிணைந்து ஆரம்பித்து பின்னர் 1976 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருவெடுத்த கட்சியின் ஊடாக 1977 ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு 15,144 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவானார் சம்பந்தன்.

1983 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்தனர்.

இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் படி தனி நாடு கோருவதற்கு ஆதரவளிக்க முடியாது என நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்தமைக்காகவும், 1983 கறுப்பு ஜூலை நிகழ்வுகளில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்கள் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தனர்.

மூன்று மாதங்கள் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றாமல் போனதால் சம்பந்தன் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்டம்பர் 7 இல் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதனையடுத்து 1989 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்ட சம்பந்தனால் தேர்தலில் வெற்றியீட்ட முடியாமல் போனது.

இதில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம், அவர் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்ட ஏழு சந்தர்ப்பங்களிலும் ஒரே ஒரு முறை மாத்திரமே தோல்வியை சந்தித்திருக்கின்றார்.

இதேபோல, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஈபிஆர்எல்எப், டெலோ உள்ளிட்ட சில கட்சிகள் இணைந்து 2001ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு புதிய கூட்டணி உருவாக்கப்பட்டதன் பின்னர், அந்த கூட்டமைப்புக்கு சம்பந்தன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதனையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்டு 18 வருடங்களின் பின்னர் மீண்டும் சம்பந்தன் நாடாளுமன்றத்திற்கு தெரிவானார்.

அதன் பின்னர், 2004, 2010, 2015 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட நாடாளுமன்ற தேர்தல்களின் தமிழரசுக் கட்சியின் ஊடாக போட்டியிட்ட சம்பந்தன் வெற்றி பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவானார்.

இவற்றுள், 2015 ஆம் நல்லாட்சி அரசாங்கத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் சம்பந்தன் செயற்பட்டு வந்துள்ளார்.

2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், உடல்நலக் குறைவு காரணமாக நாடாளுமன்ற அமர்வுகள் உள்ளிட்ட பல அரசியல்சார் நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பது குறைவாக இருந்த போதும், தமிழர் சார் அரசியல் நகர்வுகளை பழைய உத்வேகத்துடனேயே முன்னெடுத்து வந்தார்.



இலங்கை, தமிழர்களின் அரசியல் தீர்வுக்காக உள்ளூர் மாத்திரமின்றி சர்வதேச தலைவர்களையும் சந்தித்து தமது அழுத்தங்களை கொடுப்பதும், பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதிலும் சம்பந்தன் எப்போதுமே சோர்வு காட்டியதில்லை.

குறிப்பாக, நாடாளுமன்றத்திற்குள் இடம்பெறும் வாத விவாதங்களின் போதும், தமிழர்களுக்கு எதிராகவோ, அல்லது தமிழர்களை தூற்றும் விதமாகவோ, கீழ்நிலைப்படுத்தியோ சிங்கள அரசியல்வாதிகள் கூச்சலிடும் போது அதற்கு தக்க பதிலடி கொடுத்து சம்பந்தன் ஆற்றும் உரை பலரிடத்தில் வரவேற்பை பெற்ற ஒன்றாக பார்க்கப்பட்டிருக்கின்றது.

இவைகளைக் கடந்து தமிழரசு கட்சியின் ஸ்தாபகர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களுக்குப் பின்னர் ஒரு அடைமொழியுடன் நோக்கப்பட்ட ஒரு தலைவர் என்றால் அது இராஜவரோதயம் சம்பந்தன் ஒருவரேயாவார்.



தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்பது பல தசாப்தங்களாக கேள்விக் குறியாகவே இருக்கும் நிலையில், தன்னுடைய காலத்தில் ஏதாவதொரு விடயத்தை உருப்படியாக செய்ய வேண்டும் என்பதில் சம்பந்தன் மிகத் தெளிவாகவே செயற்பட்டிருந்தார்.

நாடாளுமன்றத்திற்கு உள்ளிருந்து தமிழர் உரிமைக்காக சம்பந்தன் குரல் கொடுத்து வந்த போதிலும், உரிமை கோரிய ஆயுத போராட்டக் காலத்தில், விடுதலைப் புலிகளின் செயற்பாட்டுக் காலத்தில் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக சம்பந்தன் செயற்பட்டிருக்கவில்லை என வரலாறு கூறுகிறது..

குறிப்பாக, அந்த காலப் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லாத ஏனைய அமைப்புக்களுக்கோ, அரசியல்வாதிகளுக்கோ தமிழர் அரசியலில் எவ்விதமான தீர்மானிக்கும் இடமும் இருந்திருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர்தான் சம்பந்தன் தமிழ் மக்களின் அரசியலை வழிநடத்தும் மிகப் பெரிய பொறுப்பை ஏற்றிருக்கின்றார். தலைமைப் பொறுப்பை ஏற்ற சம்பந்தன் என்றுமே சலைத்துப் போய்விடவிலலை.

அவர் முன்னால் அடுத்த தமிழர் தலைமுறை நிம்மதிப் பெருமூச்சு விட தேவையான பாதையை அமைக்க வேண்டிய மிகப்பெரும் பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, தன்னுடைய காலத்தில் ஒரு சரியான அடித்தளத்தை இடுவதற்கான தற்துனிவும் ஆற்றலும் உள்ள தலைமைத்துவம் அவரிடம் இருந்தமை மறுக்க முடியாத ஒன்று. அவரது இழப்பும் ஈழத் தமிழர் வரலாற்றில் ஈடு செய்ய முடியாத ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது. அன்னாரது இறுதிக்கிரியைகள் எங்கு நடைபெறும் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் – விக்ரோறியா கல்லூரி
சுழிபுரம் பழைய மாணவர் சங்கம் கனடா
கோடைகால வருடாந்த ஒன்றுகூடல் 2024



# தென்னிலங்கையிலும் வடகிழக்கிலும் மக்களை படுகொலை செய்த பிள்ளையானுடைய ரி.எம்.வி.வி. கட்சி தடைசெய்யபபட்டு பயங்கரவாத பட்டியலிலும் சேர்க்க வேண்டும்

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்



யுத்த காலத்தில் தென்னிலங்கையிலும் வடக்கு கிழக்கில் அப்பாவி மக்களையும் படுகொலை செய்த பிள்ளையானுடைய தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தேர்தல் ஆணையாளர் உடன் தடைசெய்ய வேண்டும் என்பதுடன் விசாணை செய்யவேண்டும். அதேவேளை சர்வதேச ரீதியில் பயங்கரவாத பட்டியலில் சேர்க்கப்பட்டு தடைசெய்யப்படவேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் ஆயுத பரிமாற்றம் இடம்பெற்றது தொடர்பாக தெரிவித்த கருத்து தொடர்பாக மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் 30-06-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அண்மையில் விஜயம் செய்த ஜே.வி.பி கட்சியிலின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடவுள்ள அனுர குமார திஸநாயக்கா இரரிாங்க அமைசசர் பிள்ளையான் மக்களை அச்சுறுத்தி அரசியல் செய்துவருவதாக குற்றச்சாட்டு தெரிவித்தார்.

இரண்டு தரப்பும் இரண்டு அரசியல் கட்சிகள் இவர்கள் ஜனநாயக நீரோட்டத்தில் மக்களுக்கு சேவை செய்யவேண்டும் ஆனால் இவர்கள் ஆயுதங்களை வைத்துக் கொண்டு மக்கள் மத்தியில் ஜனநாயத்தை காட்டிக் கொண்டு ஒரு வன்முறையில் ஈடுபட்டுள்ள விடையம் அப்பட்டமாக ஆயுத பரிமாற்றம் இடம்பெற்றிருக்கின்றதை என்பதை உறுதிபடுத்துகின்றது.

கடந்த யுத்த காலங்களில் தென்பகுதியில் இந்த ஆயுதங்களை பயன்படுத்தி அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அதேபோல வடக்கு கிழக்கிலும் அப்பாவி மக்கள் புத்திஜீவிகள், படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் இரவீந்தரநாத், ஜோசெப் பரராஜசிங்கம், மனித நேய பணியாளர்கள் 17 பேர் படுகொலை மற்றும் பல சிறுவர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டடுள்ளமை இவ்வாறு கடத்தல்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளது தொடர்பாக பல குற்றச்சாட்டுகள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி பிள்ளையான் மீது உள்ளது.

ஆகவே இன்றைக்கு இந்த ஆயுத பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது என்பதை ஒத்துக் கொண்டுள்ளமையால் இந்த படுகொாலைகளை சேர்ந்தவர்கள் செய்துள்ளனர் என வெளிப்படையாக இருக்கின்றது.

யுத்தகாலத்தில் தென்பகுதயில் நடந்த படுகொலைகள் அதேமாதிரி வடக்கு கிழக்கில் நடந்த படுகொலைகள் மூலம் கடந்த கால ஆட்சியாளர்கள் விடுதலைப் புலிகள் மீது தூக்கி போட்டனர் ஆனால் இந்த ஆயுத பரிமாற்றம் மூலம் உறுதிபடுத்தப்படுகின்றது இந்த அனைத்து படுகொலைகளையும் இந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தரப்புக்களால் செய்யப்பட்டு விடுதலைப் புலிகள் மீது போடப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த ஆயுத பரிமாற்றம் ஒரு விடையம் உறுதிப்படுத்தப்படுகின்றது கடந்த காலங்களில் தென்னிலங்கையில் அப்பாவி மக்களை கொலை செய்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அதேநேரத்தில் வடக்கு கிழக்கில் நடந்த அத்தனை படுகொலைகளும் குறப்பாக கிழக்கு மாகாணத்திலே வீதிகளிலேஅப்பாவி பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் சுட்டு கொல்லப்பட்டனர் ஊடகவியலாள், அரசில்வாதிகள் படுகொலை செய்யப்பட்டனர் இங்கு இருக்கின்ற துணை இராணுவத்துடன் செயற்பட்ட பிள்ளையான் குழு தான் இந்த படுகொலையை செய்துள்ளனர்.

இவ்வாறு படுகொலைகளை செய்த இவர்கள் இவர்கள் பயங்கரவாத பட்டியலில் சேர்க்கப்பட வேண்டியவர்கள். ஆனால் உரிமைக்காக போரடிய புலிகளை அமெரிக்கா, இந்தியா பயங்கரவாத பட்டியலில் சேர்த்துள்ளதுடன் நாட்டிலும் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே உரிமைக்காக போராடிய விடுதலைப் புலிகளை இந்த பயங்கரவாத பட்டியலில் இருந்து நீக்கவேண்டும்.

எனவே ஒரு ஜனநாகய கட்சியாக இருக்கின்றவர்கள் இப்படிபட்ட சட்டவிரோத ஆயுத பரிமாற்றத்தில் ஈடுபடமுடியாது இது சர்வதேச சட்டத்துக்கு முரணான விடையம் ஆகவே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உடனடியாக தேர்தல் ஆணையாளர் தடைசெய்யப்படவேண்டும் உடனடியாக விசாரணைக்கு உட்படுத்தபடவேண்டும் சர்வதேச மட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அமைப்பு தடைசெய்யப்படவேண்டும் இவர்து அலுவலகங்கள் சோதனையிடவேண்டும் பயங்கரவாத பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றார்.




# மட்டக்களப்பில் தீர்வு கிடைக்கும் வரை வேலையில்லா பட்டதாரிகள் போராட்டம் ஆரம்பிப்பு

மட்டக்களப்பில் வேலையில்லா பட்டதாரிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வங்குமாறு கோரி தீர்வு கிடைக்கும் வரை தொடர்போராட்த்தில் ஈடுபடபோவதாக தெரிவித்து 02-07-2024 அன்று செவ்வாய்கிழமை காந்தி பூங்காவில் தொடர் போரட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

மாவட்ட வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குமாறு கோரி தொடர் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர். இதனையடுத்து காந்தி பூங்காவில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஒன்றினைந்தனர்.

இதன்போது பல்கலைக்கழக்திற்கு தெரிவு செய்து எம்மை ஏமாற்றாதே, கல்விகொடுத்த அரசே கொள்ளி வைக்கலாமா, நாங்கள் பட்டம் முடித்து வேலையின்றி இறப்பதா? பட்டதாரிகள் வீதியில் நின்றால் நாடு எப்படி உருப்படும் வேண்டும் வேண்டும் வேலை வேண்டும். என பல வாசகங்கள் கொண்ட சுலோகங்கள் ஏந்தியவாறு கோ'ங்கள் எழுப்பியவாறு ஆர்பாட்டத்தை ஆரம்பித்து வைத்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்பாட்ட போராட்டம் தொடர்ந்து தீர்வு கிடைக்கும்வரைக்கு இந்த இடத்தில் போராடப் போவதாக தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.



# சம்பந்தர்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



ஈழத் தமிழர்களின் நவீன வரலாற்றில் நீண்ட காலங்கள் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் இருவர். ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர். மற்றவர் சம்பந்தர். இருவருமே ஒப்பீட்டளவில் நீண்ட காலம் தமிழ் மக்களின் அரசியலை நிர்ணயித்தார்கள். குறிப்பாக சம்பந்தர் 2009க்குப் பின்னிருந்து கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் அரசியலின் தவிர்க்கப்பட முடியாத முதிய தலைவராகக் காணப்பட்டார்.

அவருக்கு பின்வரும் முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவதாக அவர் ஒரு மூத்த தலைவர். இரண்டாவதாக அவர் கிழக்கை மையமாகக் கொண்டு எழுச்சி பெற்ற தலைவர். மூன்றாவதாக அவர் நீண்ட காலம் தமிழ் மக்களின் அரசியலை தீர்மானித்தவர்களில் ஒருவர்.

அவருடைய நம்பிக்கைகளை பொறுத்தவரை சம்பந்தர் ஆயுதப் போராட்டத்தில் முழு அளவு ஆதரவாளர் அல்ல. குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது கடுமையான விமர்சனங்களை கொண்டிருந்தார். எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டார். தன்னை சுகாகரித்துக் கொண்டார். ஆனால் அதற்காக அவர் ஆயுதப் போராட்ட வழிமுறையை முழுமையாக ஏற்றுக் கொண்டார் என்று பொருள் அல்ல. அதனை ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் அவருடைய வழி எதுவென்று தொகுத்துப் பார்த்தால் தெரிய வரும்.

## சம்பந்தரின் வழி எது?

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின் இலங்கை இனப் பிரச்சினைக்கு தீர்வு என்று சிந்தித்தால் அதாவது பிரிவினை அல்லாத வேறு எந்த ஒரு தீர்வைப்பற்றிச் சிந்தித்தாலும் அதற்கு சிங்கள மக்களின் சம்மதம் அவசியம் என்று சம்பந்தர் நம்பினார். எனவே சிங்கள மக்களை எப்படி அரவணைப்பது? அவர்கள் மனதில் இருக்கும் பகை உணர்வை, அச்சங்களை முற்கற்பிதங்களை எப்படி நீக்குவது? என்றும் அவர் சிந்தித்தார். ஆயுதப் போராட்டம் சிங்கள மக்களை பகை நிலைக்குத் தள்ளியிருந்தது என்றும் அவர் நம்பினார். எனவே சிங்கள மக்களை பகை நிலைக்கு தள்ளாத ஒரு அரசியல் வழியை அவர் கடைப்பிடித்தார். சிங்கள மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பது என்று அவர் தீர்மானித்தார். அதை நோக்கியே கட்சியைப் புதுப்பித்தார்.

அதனால்தான் முதலில் கஜேந்திரகுமார் அணியை வெளியே விட்டார். அதனால்தான் சுமந்திரனை உள்ளே கொண்டு வந்தார். அதனால்தான் விக்னேஸ்வரனையும் உள்ளே கொண்டு வந்தார்.

2015ல் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தில் சம்பந்தரின் பங்களிப்பு இருந்தது. அந்த ஆட்சி மாற்றத்தின் விளைவாக உருவாக்கப்பட்ட ரணில் - மைத்திரி அரசாங்கம் ஐநாவின் 30/1 தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது. நிலைமாறுகால நீதிக்கான அத்தீர்மானத்தின் பிரகாரம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டமைப்பு சார் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது. அதன்படி நாடாளுமன்றம் ஒரு சாசனப் பேரவையாக மாற்றப்பட்டு, ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. சம்மந்தர் அதில் முழுமையாக ஒத்துழைத்தார். அதுவரையிலும் இருந்த எல்லா அரசியல் யாப்புகளும் தமிழ் மக்களின் பங்களிப்பின்றி உருவாக்கப்பட்டவை என்பதனால் தமிழ் மக்களின் பங்களிப்போடு ஒரு புதிய யாப்பை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கனவு கண்டார். அதை நம்பித்தான் தமிழ் மக்களுக்கு ஒவ்வொரு பெருநாளின் போதும் வாக்குறுதிகளை வழங்கினார்.

அது மட்டுமல்ல, மன்னாரில் நடந்த "தடம் மாறுகிறதா தமிழ் தேசியம்?" என்ற ஒரு கருத்தரங்கில், ஆயர்களின் முன்னிலையில், அவர் அந்த நம்பிக்கையை எப்படி வெளிப்படுத்தினார் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதில் உரையாற்றிய நான் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டினேன். மூன்றாவது தரப்பு ஒன்றின் கண்காணிப்பு இன்றி, மூன்றாவது தரப்பு ஒன்றின் நெருக்குதல் இன்றி சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது இனப்பிரச்சினையைத் தீர்க்க முன்வராது என்று நான் அந்த உரையில் சுட்டிக்காட்டினேன். ஆனால் சம்பந்தர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தலையை சாய்த்து மண்டைக் கண்ணால் என்னைப் பார்த்தபடி சொன்னார்... "சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் ஒரு தீர்வைத் தராது என்பது ஒரு வறண்ட வாதம்; ஒரு வறட்டு வாதம்" என்று

யாப்புருவாக்க முயற்சிகள் ஓர் இடைக்கால வரைபுவரை முன்னேறின. அந்த இடைக்கால வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதித்த பொழுது அதில் டிலான் பெரேரா ஆற்றிய உரையை இங்கு சுட்டிக்காட்டலாம். அது சம்பந்தரின் அரசியல் வழியை மிகக்கூர்மையாக வெளிப்படுத்தும் ஓர் உரை. சம்பந்தரைப் போல விட்டுக்கொடுக்கும் ஒரு தலைவரை இனிக் கண்டு பிடிப்பது கடினம், சம்பந்தர் அளவுக்கு வேறு யாரும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். எனவே சம்மந்தரின் காலத்திலேயே ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள் என்ற பொருள்பட அந்த உரையில் சுட்டிக் காட்டியிருந்தார். அதுதான் உண்மை. ரணில் மைத்திரி அரசாங்கத்தோடு இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஒரு புதிய யாப்பை உருவாக்குவதற்காக சம்பந்தர் அடியொட்ட வளைந்து கொடுத்தார். விளைவு என்ன?

யாப்பு உருவாக்க முயற்சிகளை அதன் பெற்றோரில் ஒருவராகிய மைத்திரிபால சிறிசேனவே 2018ல் காட்டிக் கொடுத்தார். சம்பந்தரின் கனவு கலைந்தது. அவர் தமிழ் மக்களுக்கு வழங்கிய எல்லா வாக்குறுதிகளும் பொய்த்துப் போயின. சிங்கள மக்களுக்கு நம்பிக்கை வரும் வரையிலும் விட்டுக் கொடுப்பதன் மூலம், ஒரு தீர்வைப் பெறலாம் என்ற அவருடைய நம்பிக்கை தோற்கடிக்கப்பட்டது. அந்த நம்பிக்கை மட்டும் தோற்கடிக்கப்படவில்லை. அதன் விளைவாக கட்சி அதுவரையிலும் வகித்து வந்த ஏகபோகத்தை இழந்தது. அடுத்த தேர்தலில் கட்சியின் வாக்குகள் சிதறின. அது மட்டுமல்ல, கட்சியே இப்பொழுது சிதறிவிட்டது.

அவருடைய தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் சிதறவில்லை. தமிழரசுக் கட்சியும் இரண்டாக உடைந்துவிட்டது. அவர் உருவாக்க முற்பட்ட வழியைப் பின்பற்றும் ஒரு தரப்பும் அந்த வழிக்கு எதிராக காணப்படும் மற்றொரு தரப்பும் என்று தமிழரசுக் கட்சி இரண்டு அணிகளாகப் பிரிந்து நிற்கின்றது.

எனவே இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். கூட்டமைப்பின் தலைவராக அல்லது தமிழ் மக்களின் முதிய தலைவராக சம்பந்தர் கடந்த 15 ஆண்டுகளிலும் எதைச் சாதித்தார் என்று பட்டியலிடலாம்...

முதலாவதாக, சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முற்பட்டு அதில் தோல்வி கண்டார். அதாவது வரலாறு அவருக்கு வழங்கிய பெறுமதியான ஆண்டுகளை அவர் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தவில்லை. ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான தமிழ் அரசியலில் பண்புரு மாற்றத்துக்கு தலைமை தாங்க அவரால் முடியவில்லை. இரண்டாவதாக, சிங்கள மக்களுக்கு அதிகம் விட்டுக் கொடுத்ததன்மூலம் அவர் எதையுமே பெற முடியவில்லை. மாறாக, தான் தலைமை தாங்கிய கூட்டின் சிதைவுக்கும் அதனால் காரணமாக அமைந்தார்.

ஈழத் தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில் அதிக ஆசனங்களை கொண்டிருந்த ஒரு காலத்தில் அந்தக் கூட்டுக்கு அவர் தலைமை தாங்கினார். ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் கூட்டு உடைந்துடைந்து சிறுத்துக்கொண்டு வந்து இப்பொழுது தமிழரசுக்கட்சியாக சிறுத்து விட்டது. இப்பொழுது தமிழரசுக் கட்சியும் இரண்டாக உடைந்துவிட்டது. தமிழ்த் தேசிய பிரதிநிதித்துவம் 22 ஆசனங்களில் இருந்து ஆறு ஆசனம் வரையிலும் உடைந்து போனமை மகா தோல்வி.

அதுபோலவே தன்னுடைய சொந்தத் தொகுதியிலும் அவர் தொடர்ச்சியாகப் பெற்று வந்த வாக்குகளை பட்டியலிட்டுப் பார்த்தால் அதில் படிப்படியாக வீழ்ச்சியைக் காணலாம். இப்பொழுதிருக்கும் நிலையில் திருக்கோணமலையில் தமிழரசுக் கட்சிக்குப் போட்டியாக மற்றொரு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சி களமிறங்கினால் இம்முறை சம்பந்தர் பெற்ற ஆசனம் அடுத்த முறை கிடைக்குமா என்பது சந்தேகம்தான். சிலசமயம் சம்பந்தரின் அனுதாப வாக்குகள் கிடைக்கக்கூடும்.

இவ்வாறு, தான் தலைமை தாங்கிய கூட்டுக்குள்ளும் ஒரு தலைவராக தோல்வியடைந்து, தனது சொந்த தேர்தல் தொகுதியில், தனது தாய்ப்பட்டினத்தில், தன்னுடைய ஆதரவுத் தளத்தை படிப்படியாகத் தேய விட்டதில் தோல்வியுற்று, தான் அங்கம் வகிக்கும் மூத்த கட்சிக்குள்ளும் ஒரு தலைவராக அவர் தோல்வியடைந்து விட்டார்.

ஒரு தலைவர் தன் வாரிசுகளாகக் களமிறக்கும் அரசியல்வாதிகள் அந்த தலைவரின் பெயரை வரலாற்றில் ஸ்தாபிப்பவர்களாக அமைய வேண்டும். ஆனால் சம்பந்தர் கொண்டு வந்த சுமந்திரனோ அல்லது விக்னேஸ்வரனோ அவ்வாறு இருக்கவில்லை. விக்னேஸ்வரன் சம்பந்தரின் வழி தவறு என்று கூறி அவரிடமிருந்து விலகிச் சென்றார். சுமந்திரன் சம்பந்தரின் பட்டத்து இளவரசர் போல காணப்பட்டார். ஆனால் கட்சிக்குள் தேர்தலை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த பொழுது அவர் சம்பந்தரை பொதுவெளியில் அவமதித்தார். தன்னுடைய வாரிசினாலேயே அவமதிக்கப்படும் ஒரு தலைவராக சம்மந்தர் அவருடைய இறுதிக் காலத்தில் காணப்பட்டார்.

அவருடைய தாய்க் கட்சி நீதிமன்றத்துக்கு இழுக்கப்பட்டபொழுது, அவர் அதைத் தடுக்கும் சக்தியற்றவராக இருந்தார். சாதாரணமாக ஒரு குடும்பத்தில் பிணக்கு என்று வரும்பொழுது மூத்தவர்கள் அதைத் தீர்த்து வைப்பார்கள். கட்சிக்குள்ளும் அப்படித்தான். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முது தலைவர்கள் பிணக்குகளைத் தீர்த்து வைப்பார்கள். ஆனால் மிக மூத்த தலைவராக அவருடைய சொல்லை அவருடைய வாரிசே கேட்கவில்லை. விளைவாக கட்சி நீதிமன்றத்தில் நிற்கிறது. அதுமட்டுமல்ல அவருடைய சொந்த தேர்தல் தொகுதியில் தன்னை மதியாமல் நியமனங்கள் செய்யப்படுகின்றன என்ற பொருள்பட அவர் ஒரு முறைப்பாட்டைச் செய்யுமளவுக்கு பலவீனமாக காணப்பட்டார். சம்பந்தரின் சுமார் இரண்டு தசாப்த கால தலைமைத்துவத்தை மதிப்பிட இது ஒன்றே போதும். அவர் தன்னுடைய தாய்க் கட்சியைச் சிதைய விட்ட ஒரு தலைவர். அவரால் எப்படித் தேசத்தை திரட்டியிருக்க முடியும்? அவருடைய கட்சி அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி எதுவென்றால், அவருடைய இறப்பின் பின்னாவது கட்சியை உடைவிலிருந்து பாதுகாப்பதுதான்.

### வீணாவின் கவிக்கணை

செய்யாத குற்றத்திற்கு
தண்டனை பெறுவது,
உயிரோடு இருக்கும் ஒருவரின்
இதயத்தை பிடிங்கி
வெளியே எறிவது போன்றது,
ஒருவரை துன்புறுத்தி
இன்பம் காணும் ஜென்மங்களை,
மனிதம் இழந்த மந்தைகளை,
மனிதர் என்று கூறுவதில்
எந்த அர்த்தமும் இல்லை.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் சம்பந்தன் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தனது 91 ஆவது வயதில் காலமானார்

## அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் "புலம் பெயர் தமிழர் அமைப்பு" வெளியிட்டுள்ள அறிக்கை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் சம்பந்தன் 30-06-2024 அன்று தனது 91 ஆவது வயதில் காலமானார். அவரது மறைவுக்காக அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பது பொருத்தமானது.

- எனினும் கடந்த 15 வருடங்களாக தமிழருக்கு எதிராக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக தமிழர்களாகிய நாம் அவரை மன்னிக்க முடியாது. அவரது தலைமைத்துவம் சிங்கள ஆட்சிக்கு எம்மை அடிபணியச் செய்தது, அது எந்த நேரத்திலும் எளிதில் மறக்க முடியாத அல்லது மன்னிக்க முடியாத ஆழமான வடுக்களை ஏற்படுத்தியது.
- ஐக்கிய இலங்கைக்காக வாதிடுவதன் மூலம் தமிழர்களின் சுயநிர்ணயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சர்வதேச முயற்சிகளை அவர் முறியடித்தார்.
- சம்பந்தன் தனது கூட்டாளியான திரு. சுமந்திரன் ஊடாக சிங்களக் குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்காக சர்வதேச விசாரணையை சீர்குலைத்துள்ளார்.
- கொழும்பிற்கு எதிராக தமிழர்கள் போராட்டம் நடத்துவதை தடுக்கும் வகையில் பொங்கல், தீபாவளி, நவத்திரி, தமிழ் புத்தாண்டு போன்ற இந்துக்களின் புனித நிகழ்வுகளுடன் இணைந்து அரசியல் தீர்வு எட்டப்படும் என சம்பந்தன் பொய்யாக கூறினார் . இந்த உத்தியானது 15 ஆண்டுகளாக தமிழர்களால் எந்த இடையூறும் இன்றி அமைதியை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டது.

போரில் ஏறக்குறைய வெற்றி பெற்ற போதிலும், போரின் பின்னர் சம்பந்தனின் தலைமையின் கீழ், தமிழர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர்.

அவரது தலைமையின் கீழ் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு மத்தியிலும், சம்பந்தனின் மறைவுடன் புதிய ஆரம்பங்கள் சாத்தியம் என்ற ஊகங்கள் தற்போது எழுந்துள்ளன.

7 1/2 ஆண்டுகளுக்குப் பிறகு சனி விலகும் என்று நம்பப்பட்டது, ஆனால் 15 ஆண்டுகள் தங்கியிருந்தது, இந்த நிகழ்வு புதிய தலைமைத்துவத்தை நோக்கி நகர்வதைக் குறிக்கிறது. அவரது மறைவைத் தொடர்ந்து தமிழர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமையலாம் என பலர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

சுமந்திரனை கட்சிக்குள் இருக்கும் பதவியிலிருந்து ITAK நீக்க வேண்டிய நேரம் இது. கட்சி மற்றும் தமிழர்களின் எதிர்காலம் இரண்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு தீர்மானத்தையும் அவர் செல்வாக்கு செலுத்துவதைத் தடுப்பது அவசியமாகும்.





# யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு வத்திராயனில் மர்மமான முறையில் தீக்காயங்களுக்குள்ளானவர் மரணம்!



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் கடந்த 20.06.2024 அன்று இரவு எரியூட்டப்பட்ட நிலையில் பொதுமக்களால் மீட்கப்பட்டு, மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பலனின்றி 30.06.2023 இரவு மரணமடைந்துள்ளார்.

மருதங்கேணியைச் சேர்ந்த சரவணபவானந்தன் சிவகுமார் (வயது 44) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி கிழக்கு அமைப்பாளராகவும், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் இயக்குனருமாக செயற்பட்டு வந்தார்.

குறித்த நபர் தீக்காயத்திற்கு உள்ளானதற்கான காரணம் எதுவும் இதுவரை கண்டுப்பிடிக்கப்படவில்லை. யாரும் இதுவரை கைது செய்யப்படவுமில்லை. அவரது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மறைந்த இரா. சம்பந்தனின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ச. குகதாசன் நாடாளுமன்ற நியமனம்


ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
பகுதி I : தொகுதி (I) - பொது
அரசாங்க அறிவித்தல்கள்



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் மறைவினால் ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு சண்முகம் குகதாசனின் பெயர் வர்த்தமானியில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு இரா.சம்பந்தனிற்கு அடுத்தபடியாக சண்முகம் குகதாசன் அவர்கள் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தார்.

அந்த தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தேர்வான இராஜதவரோதயம் சம்பந்தனின் தற்போதைய மறைவால் ஏறபட்ட வெற்றிடத்திற்கு இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ச.குகதாசன் பொதுத் தேர்தலில் 16,770 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பதும் இவர் கனடாவில் பல வருடங்கள் வாழ்ந்து பல சமூக மற்றும் அரசியல் செயற்பாடுகளில் முன்னணியில் திகழ்ந்தார் என்பதும் பின்னர் தாயகம் சென்று இருா்.சம்பந்தன் அவர்களோடு இணைந்து அவருககு செயலாளராகவும் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கனடா தமிழீழச் சங்கத்தின் ஊதியம் பெறும் உத்தியோகத்தராகவும் திரு குகதாசன் பணியாற்றினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் தாக்கியதால் பாடசாலை செல்ல மறுக்கும் மாணவன் – முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் ஒன்பதில் கல்வி கற்கும் மாணவனின் தலையில் ஆசிரியர் தாக்கியதால் பாடசாலை செல்வதற்கு மாணவன் மறுப்புத் தெரிவித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவது, கடந்த 19 ஆம் திகதி குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் மீது ஆசிரியர் தலையில் தாக்கியுள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவன் பாடசாலை செல்வதற்கு மறுப்புத் தெரிவித்து வரும் நிலையில் சம்பவத்துடன் தொடர்பட்ட ஆசிரியருடன் பெற்றோர் சந்திப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதிபர் குறித்த ஆசிரியருடன் தாம் பேசுவதாக தெரிவித்ததாக பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனினும் தமது பிள்ளைக்கு இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் குறித்த ஆசிரியர் தம்முடன் கலந்துரையாடாத நிலையில் குறித்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிசாருக்கு தகவல் தெரியப்படுத்திய நிலையில் பொலிசார் செவ்வாய்க்கிழமை குறித்த மாணவனையும் பெற்றோரையும் பொலிஸ் நிலையம் அழைத்து விசாரித்துள்ளனர்.

இதன் போது குறித்த மாணவனை வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு பொலிசார் அறிவுறுத்தல் வழங்கியதாக பெற்றோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதித் தேர்தலும் தென்னிலங்கையும்



இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டு நடைபெறவேண்டும் என பல்வேறு தரப்பினராலும் குறிப்பிடப்பட்டு வந்தது. எனினும் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போட வேண்டும் அல்லது ரணில் விக்கிரமசிங்க மேலும் சில ஆண்டுகள் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் அல்லது தேர்தல் நடத்தாது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி பதவியை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பன போன்ற பல்வேறு கதைகள் குறிப்பிடப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கடந்த வாரம் தேர்தல் ஆணைக்குழுவின் அறிக்கையின் படி ஜனாதிபதித் தேர்தலானது செப்டெம்பர் - ஒக்டோபர் மாதத்தில் நடைபெறலாம் என்று அறிவித்ததுடன் அதுதொடர்பான அறிவிப்பு ஜுலை மாதம் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க இதுவரை தான் எந்தக் கட்சியில் போட்டியிடுவது அல்லது பொதுவேட்பாளராக போட்டியிடுவதா என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றனார். அத்துடன் அவர் தற்போது ஜனாதிபதியாக காணப்படுகின்ற போதிலும் பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் ஆதரவுடனேயே ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதுடன் அவர்களின் கொள்கைப்படியே செயற்பட்டும் வருகின்றார்.

பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களில் சிலர் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதுடன் ஐக்கிய தேசிய கட்சியில் சிலர் இணைந்தும் சிலர் வேறு கட்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்ற போதிலும் சில உறுப்பினர்கள் பொதுஜன பெரமுன கட்சியிலேயே நீடிக்கின்றனர். அவர்கள் பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரையே தாம் ஆதரிக்க உள்ளதாகவும் எனவே தமது கட்சியின் சார்பில் வேறு ஒருவர் ஜனாதிபதி வேட்பாளராக இருக்க வேண்டும் என குறிப்பிட்டு வந்தனர்.

இந்தநிலையில் அண்மையில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்ட நாமல் ராஜபக்ச தமது கட்சியின் கொள்கைகளை ஏற்று செயற்படும் கட்சியை சேர்ந்தவரே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அவருக்கு போட்டியாக சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸ நாயக்க, ஆகியோர் போட்டியிட உள்ளதுடன் தம்மிக்க பெரேராவும் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடுவார் என்றும் கூறப்பட்டு வந்தது. இவை அனைத்தும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றால் அல்லது அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரே ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஆனால், ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக சில சம்பவங்கள் அண்மைய நாட்களின் பல சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளன.

அதன்படி, தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து அரசியலமைப்பின் பிரகாரம் விளக்கமளிக்குமாறு உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த மனுவை தொழிலதிபர் சி.டி.லெனவவினால் தாக்கல் செய்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் திகதி குறித்து உயர் நீதிமன்றம் விளக்கமளிக்கும் வரை தற்போது நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜெ.ஆர். ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாஸ, சந்திரிக்கா, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக்காலங்களில் ஜனாதிபதியின் பதிவிக்காலமானது 6 ஆண்டுகளாக காணப்பட்டது. எனினும் மைத்திரிபால ஜனாதிபதியாக பதிவியேற்ற பின்னர் முன்வைக்கப்பட்ட அரசியல் அமைப்பின் பிரகாரம் (அரசியலமைப்புத் திருத்தம்) ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. எனினும் அது சரியான முறையில் சட்டமாக்கப்பட்டுள்ளதா அல்லது அவை தொடர்பான மாற்றங்கள் செய்ய முடியுமா என்பது தொடர்பாக நீதிமன்றத்தில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடுவதற்கான உத்தி ஒன்றாகவே கருதப்படுவதாக அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டு வருகின்றார்கள். முன்னைய அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதிவிக்காலம் ஆறு ஆண்டுகள் என குறிப்பிட்டு தீர்ப்பு வழங்கப்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த வருடம் தேர்தலை நடத்தாது மேலும் ஒரு ஆண்டுகள் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் ஒரு அங்கமாகவே ஜனாதிபதி பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும் செயற்பாட்டை மேற்கொண்டு வருவதாக தெரிகின்றது. இதற்கு முன்னரும் ஒருதடவை தேர்தலை நடத்துவது தொடர்பாக அறிவிப்பினை வெளியிட்டுவிட்டு அதற்கு தேவையான நிதியை ஒதுக்கவே அல்லது அரச அச்சுத் திணைக்களத்துக்கு செலுத்தாமல் இருந்து தேர்தல் பிற்போடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தநிலையில், வழக்குத் தாக்கல் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி, மனுதாரர் தன்னிடமோ அல்லது தனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசிக்கவோ ஆலோசனை பெறவோ இல்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி சமிந்திர தயான் லெனவ என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

மேற்படி மனுவை தாக்கல் செய்வதன் மூலம், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 12(1), 82(6), 3, 4, 118 மற்றும் 125 ஆகிய பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 126 இன் படி அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் 3ஆம் பிரிவின் ஊடாகத் திருத்தப்பட்ட பிரிவு 30(2)ஐ வியாக்கியானம் செய்யக்கூடாது என குறித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜனாதிபதியின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் என்பதைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணைக்குழு அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என்பதால் உயர் நீதிமன்றத்தினால் இது குறித்த இறுதித் தீர்ப்பு அறிவிக்கப்படும் வரையில், 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான மேலதிக பணிகள் முன்னெடுக்கப்படுவதைத் தடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மனுதாரர் தரப்பு குறித்த மனுவில் கோரியுள்ளது.

மேலும், ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்கள் என்பதோடு 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருப்பது சரியானது என்பதே தனது உறுதியான நிலைப்பாடாகும் என்பதையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

நடப்பு ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் என்று கோரியும், அதுவரையில் தற்போது திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக்கூடாது என்று உத்தரவிடக்கோரியும் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் திங்கட்கிழமை ஜுலை 8ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதன் நிமித்தம், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு அமைக்கப்பட்டுள்ளது.

விஜித் மலல்கொட, முர்டு பெர்னான்டோ, ப்ரீதி பத்மன், எஸ்.துரைராஜா ஆகியோர் இந்த அமர்வில் இடம்பெறுகின்றனர்.

எனவே, மேற்படி சம்பவங்களை நோக்குமிடத்து ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பான அறிவிப்பு எப்போது வெளிவரும் என்பது குறித்து ஊகிக்க முடியாதுள்ளது.

இது தொடர்பில் அனுரகுமார தகருத்துத் தெரிவிக்கையில், 2019 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியின் பதவிக்காலத்தை உயர் நீதிமன்றத்தால் தீர்மானிக்கக் கோரிய போது, உயர் நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியது. இதன்படி அரசியலமைப்பின் 19வது திருத்தத்தின்படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று அனுரகுமார தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், ஜனாதிபதி மற்றும் அவரது குழுவின் சதிகள் அல்லது தந்திரோபாயங்களை தேசிய மக்கள் சக்தி தோற்கடிக்கும் என்று அவர் கூறியுள்ளார்

**- சத்தியன் (கனடா)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை கைதுசெய்யக்கோரி யாழ். மாவட்ட கடற்தொழில் அமைப்புகளால் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது



01-07-2024 அன்று (முற்பகல் 11.30 மணியளவில் யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகம் முன்றலில் யாழ். மாவட்ட கடற்தொழில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து போராட்டத்தை முன்னெடுத்தன.

யாழ்ப்பாணம் மருதடிச் சந்தியில் ஆரம்பித்த குறித்த போராட்டமானது இந்திய துணைத் தூதரகம் முன்றலில் நிறைவுற்றது.

இதன்போது கடற்தொழில் அமைப்புகளால் இந்தியத் தூதருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

யாழ் மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புகளின் சம்மேளனத் தலைவரான செல்லத்துரை நற்குணம், யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவரான சிறீ கந்தவேள் புனிதப் பிரகாஸ், ஆகியோர் இந்த ஒன்றிணைந்து போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.



# இரா. சம்பந்தன் அவர்களது மறைவுக்கு வடக்கு ஆளுநர் இரங்கல்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 14 ஆவது எதிர்க்கட்சித் தலைவரும், சிரேஷ்ட அரசியல்வாதியும், சட்டத்தரணியுமாகிய திருவாளர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து கவலை அடைகின்றேன்.

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட தலைவராக காலம் சென்ற இரா. சம்பந்தன் அவர்கள் காணப்பட்டார்.

இன ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் நாட்டு மக்களின் நன்மைக் கருதி அன்னார் செயற்பட்டார் என்றால் மிகையாகாது. இத்தகைய ஒரு பெரும் தலைவரின் இழப்பானது தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அன்னாரின் மறைவானது இலங்கை வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்துகொண்டிருந்த குரல் இன்று மௌனித்துள்ளது. காலம் சென்ற திருவாளர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் பிரிவால் மீளாத் துயரில் வாடும் அவரின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் ஏனைய அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ், ஆளுநர்
வடக்கு மாகாணம்.

# மதவெறி கொண்ட யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் பிறட்லீ அவர்களைவெளியேறக்கோரி கவனயீர்ப்பு



இலங்கை சிவசேனை சிவதொண்டர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளராக கடந்த வாரம் பொறுப்பேற்று, பொறுப்பேற்ற முதற் தினத்திலேயே வலயக் கல்விப் பணிமனையில் இருந்த சைவக் கடவுள்களின் திருவுருவப்படங்களை அகற்றிய கிறிஸ்தவ மதவெறி கொண்ட கல்விப் பணிப்பாளர் திரு.பிறட்லீ அவர்களை உடனடியாக யாழ்ப்பாண கல்வி வலயத்தில் இருந்து வெளியேற்றுமாறு கோரிய கவனயீர்ப்பு போராட்டம் இன்று யாழ்ப்பாண வட மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

“இந்து பாரம்பரிய மரபுகளை அழித்து சிவபூமியை கிறிஸ்துவ பூமியாக்காதே, தமிழர் கல்விப் பண்பாட்டினை அழிக்காதே, வலயப் பணிப்பாளரின் மதவெறி செயற் பாட்டினை கண்டிக்கின்றோம், உடலின் உயிரான சைவத்தினை அழிப்பது தமிழன அழிப்பே, தமிழ் மண்ணின் தமிழ் கடவுளை அகற்றும் துணிவின் பின்புலம் யார்? தமிழன விரோதியே வலயத்தினை விட்டுபோ” என்ற வாசகங்கள் எழுதிய பாதாதைகள் ஏந்தியும் கோசமிட்டும் தமது எதிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதில் இலங்கை சிவசேனை சிவதொண்டர் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தம், சிவ தொண்டர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## வயாவிளான் நலன்புரிச் சங்கம் (கனடா) நடாத்தும் ஒன்றுகூடல்

வயாவிளான நலன்புரிச் சங்கம் நடாத்தும் ஒன்று கூடல் எதிர்வரும் ஆடி மாதம் 6ம் திகதி 2024 சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணி வரை 390 Morningside Avenue இல் அமைந்துள்ள Morningside Park (Morningside/Ellesmere) Lot No:6 இல் நடைபெற இருப்பதால் அனைத்து நலன்புரிச்சங்க உறுப்பினர்களையும், மற்றும் நலன் விரும்பிகளையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

மேலதிக தொடர்புகளுக்கு:
தரன்: (647) 924-9390
பரம்: (416) 454-1263
கிருபா: (647) 501-9147

## அறிவித்தல்!
## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக்கூட்டம்

அன்புடையீர்,
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும் 20-07-2024 சனிக்கிழமை காலை 10 :30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வு நடைபெறும் இடம் பற்றிய விபரங்களை பின்பு அறியத் தருவோம். பொதுக்கூட்டத்தில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் பங்கேற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்கும், நிர்வாகசபை உறுப்பினர் பதவிகளுக்கு விண்ணப்பிதற்கும் , உரிய இறுதித் திகதி 12-07-2024.
நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்களை 12-07-2024 இற்கு முதல் கிடைக்கத்தக்கதாக **akanisuresh@gmail.com** அல்லது **vathani.suntha@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
அன்புடன்
அகணி சுரேஸ் , தலைவர் 416-732-8021 **akanisuresh@gmail.com**
கமலவதனா சுந்தா, செயலாளர் **vathani.suntha@gmail.com** (647)765-9761
ரவி கனகசபை, பொருளாளர் **kana-ravi@hotmail.com** (416)301-9027



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்பபாணத்தில் மகளிர் இல்லத்தில் பொருத்தப்பட்ட சிசிடிவி அரசியல் பின்னணியில் உருவானதா?



யாழ்ப்பாணத்தில் மாணவிகள் தங்கி இருந்த இல்லம் ஒன்று அவர்கள் குளிக்கும் காட்சிகள் பதிவானதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தது. பொதுவாக யாழ்ப்பாணத்தில் பெண்கள் மற்றும் அனாதரவற்ற சிறுவர்களைப் பராமரிக்கவென பல பராமரிப்பு இல்லங்கள் காணப்படுகின்றன. யுத்தத்தின் பின்னர் வடமாகாணத்தில் பல்லாயிரம் சிறுவர்கள் அனாதைகளாகவும், பல பெண்கள் தமது கல்வியைத் தொடர முடியாமலும் காணப்படுகின்றனர். இத்தகைய நபர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் புலம்பெயர்ந்த தமிழர்கள், மற்றும் தொண்டு நிறுவனங்கள், ஆலயங்கள் என்பவற்றின் உதவியுடன் பல இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பல ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே இத்தகைய சிறுவர் இல்லங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேபோல் விடுதலைப் புலிகளின் காலத்தில் செஞ்சோலை சிறுவர் இல்லம் போன்ற பல பராமரிப்பு இல்லங்கள் காணப்பட்டன. அவை அனைத்தும் சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் என்றும் பெண்கள் பராமரிப்பு இல்லங்கள் எனவும் அழைக்கப்பட்டன.

இவ்வாறு செயற்பட்டு வரும் இல்லங்களில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிகள் தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டியது கட்டாயமானதாகும். அனுமதியற்ற முறையில் செயற்பட்டு வரும் இல்லங்கள், போதிய வசதி இன்றி காணப்படும் இல்லங்கள் அனைத்தும் மூடப்படவேண்டியது கட்டாயமானதாகும். ஆனால் அனுமதி பெற்று செயற்படுகின்ற சிறுவர் - பெண்கள் பராமரிப்பு இல்லங்களில் இடம்பெறும் வன்முறைகள், கொடுமைகள் அனைத்தும் உரிய முறையில் ஆராயப்பட்டு அவற்றுக்கு சரியான தீர்வினை பெற்றுக் கொடுக்கவேண்டியது உயர் அதிகாரிகளின் கடமையாகும்.

அந்த விடுதியில் 10 குளியலறைகள் காணப்படுகின்றபோதிலும், அவை அனைத்தும் விடுதிப் பராமரிப்பாளர்களின் பயன்பாட்டுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளன. சிறுமிகளுக்கு வெளிப்புறமாக நீர் நிரப்பப்பட்ட தொட்டியொன்றே குளிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சிறுமிகள் குளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியே கண்காணிப்புக் கமராவால் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தாம் குளிக்கும் இடத்துக்கு மேற்புறமாக கண்காணிப்புக் கமரா பொருத்தப்பட்டிருப்பதை அவதானித்த சிறுமிகள். அதுதொடர்பில் தமது பெற்றோருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். விடயம் தொடர்பில் சிறுமிகளின் பெற்றோர் இல்லத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது, பாதுகாப்புக் காரணங்களுக்காக வீதியைப் பதிவு செய்வதற்காகவே கமரா பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மேற்படி முறைப்பாட்டின் படி மேற்கொள்ளப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தெல்லிப்பழையில் இயங்கும் பெண்கள் இல்லத்தினையும் மற்றொரு சிறுவர் இல்லத்தினையும் உடனடியாக மூடிவிடுமாறு வட மாகாண ஆளுநரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் இயங்கும் சிறுவர் இல்லங்கள் தொடர் மேற்பார்வை செய்து ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பதிவுசெய்யாமல் இயங்கும் அனைத்து சிறுவர் இல்லங்களையும் உடனடியாக மூடுவதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வெளி மாகாணங்களில் உள்ள சிறார்களை வரவழைத்து வடக்கு மாகாணத்திலுள்ள சிறுவர் இல்லங்களில் தங்க வைக்க அனுமதி வழங்க வேண்டாம் எனவும், அவ்வாறு தங்க வைக்கப்பட்டிருப்பின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களை சொந்த ஊருக்கு திருப்பி அனுப்பி வைக்குமாறும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு முக்கிய விடயம் ஒன்று தொடர்பாக நாம் நோக்கும் போது சிறுவர் இல்லத்திலோ அல்லது மகளிர் இல்லத்திலோ காணப்படும் அனைத்து தரப்பினரும் ஒட்டுமொத்தமாக திருப்பி அனுப்பிவிட முடியாது. இங்கு தாய் தந்தையர்களை இழந்த பல பிள்ளைகளும் இங்கு காணப்படுகின்றார்கள். அவ்வாறு பெற்றோர் இல்லாத அல்லது சிறுவர்களை பராமரிக்க முடியாது சிறுவர் இல்லங்களில் விடப்பட்டுள்ள சிறுவர்கள் அனைவரின் நிலை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் சிறுவர் நிலையங்களை மூடிவிடுவதன் மூலம் இத்தகைய முயற்சிகளுக்கு நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியாது. வீடுகளுக்குச் செல்ல முடியாத பிள்ளைகளுக்கு பாதுகாப்பான இடம்ஒன்றை அரசாங்க அதிகாரிகள் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்படுகளை செய்வதுடன் அவர்களின் எதிர்கால பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் சிறுவர் இல்லங்கள் போன்ற பொது இடங்களில் பாதுகாப்புக்கு சிசிடிவி கமரா பொருத்தும் போது பிரதேச செயலகம் அல்லது உரிய அதிகாரிகளின் அனுமதியைப் பெற்று சரியான இடத்தில் அவை பொருத்தப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்க வேண்டும்.

அரசாங்க அதிகாரிகள் பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்தே சம்பளத்தைப் பெற்றுக் கொள்கின்றார்கள் எனவே, அவர்கள் தமது கடமைகளை உரிய முறையில் மக்களுக்கு வழங்குவதன் மூலம் இவ்வாறான செய்பாடுகளுக்கு முடிவு கட்டலாம்.

எனினும் இந்தச் சம்பவத்தில் சமயத் தொண்டாற்றும் நபர் ஒருவரின் பெயர் குறிப்பிட்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியாகி உள்ளது. இது சில சந்தேகங்களை ஏற்படுத்துவதாக உள்ளது.

அண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என தமிழ் தரப்பில் பரவலாக பேசப்பட்டு வருகின்றது. வட-கிழக்கில் உள்ள முக்கிய அரசியல் கட்சிகளும் தொண்டு நிறுவனங்களும் சமூக ஆர்வலர்களும் இணைந்து இத்தகைய தீர்மானத்தை எடுத்து அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சியின் சில உறுப்பினர்கள் இத்தகைய நடவடிக்கைக்கு எதிரான கருத்தினை முன்வைத்து வருகின்றார்கள்.

அவர்களின் கருத்தின்படி தமிழ் மக்களால் நிறுத்தப்படும் பொது வேட்பாளரால் வெற்றிபெற முடியாது எனவும் எனவே, தென்னிலங்கையில் போட்டியிடும் சிங்கள வேட்பாளர்களின் ஒருவரையே ஆதரிக்க வேண்டும் என்றும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார்கள். இது ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலாகவே பொதுமக்களால் பார்க்கப்படுகின்றது. அத்துடன் அவர்கள் தென்னிலங்கையை திருப்த்திப் படுத்தவும் அங்கு தமக்கு வேண்டப்பட்ட நபரின் வெற்றிக்காக பாடுபட்டு அவரிடமிருந்து தமக்கான நலன்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தைக் கொண்டவர்கவே காணப்படுகின்றனர்.

எனினும் மேலும் சில கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் இல்லையெனில் தமிழ்மக்களின் எதிர்ப்பினைக் காட்ட முடியாது என்றும் குறிப்பிட்டு வருகின்றனர். இதற்கு முன்னரும் ஒருதடவை ஜனாதிபதித் தேர்தலைப் தமிழ்மக்கள் புறக்கணித்ததன் மூலம் பல துன்பங்களை எதிர்கொண்தனையும் மறந்து விட முடியாது.

அத்துடன் அண்மைய செய்திகளின் படி சில உறுதிப்படுத்தப்படாத விடயங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் தமிழ் மக்கள் சார்பாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பொது வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியல் சில கசிந்துள்ளன. அதில் மேற்படி சிறுவர் இல்லத்தின் பொறுப்பாளர் தேர்தலுக்கு முன்னிறுத்தப்பட உள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றன. இது உறுதிப்படுத்தப்படாத விடயமாக காணப்படுகின்ற போதிலும் இவ்விடயம் பத்திரிகை ஒன்றில் செய்தியை வெளியிட்ட செய்தியையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து இது எதிர்கால அரசியல் நிகழ்ச்சி நிரல்களினை நோக்கமாகக் கொண்ட செயற்பாடாக காணப்படுமே என சந்தேகிக்ககத் தோன்றுகின்றது.

எது எவ்வாறான போதிலும் எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு முன்வைக்கப்பட்ட பின்னரே இச் சம்பவத் தொடர்பான உண்மைகள் வெளிவரும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினால் எதிர்காலத்தில் சிறுவர்கள் பெண்பிள்ளைகளுக்கு கிடைக்க இருக்கின்ற சில சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது போகலாம்.

எனவே, ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் பல்வேறு கோணத்தில் ஆராய்ந்து அடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் சிறுவர் இல்லங்களும் பராமரிப்பு நிலையங்களும் அரசாங்கத்தின் பொறுப்பில் சரியான நிர்வாகத்தின் கீழ் இயங்குமாக இருந்தால் அதன் மூலம் பின்தங்கிய அல்லது பெற்றோர் இல்லாத பிள்ளைகளின் எதிர்காலத்தினை சிறந்த முறையில் வளர்த்தெடுக்க முடியும்.

**சண்முகம் - மொன்றியால் - கனடா**



# SAME BREW A LEGENDARY ROAR

**SINHA beer, your beloved brew, continues to reign supreme, honouring its iconic LION identity, the name by which it is recognised worldwide.**

If you've ever indulged in the inimitable flavour of Sinha Stout, you've likely been captivated by its unique taste. While retaining its unique character, Sinha is now poised to embrace its original identity as Lion, the name that conquered the hearts of beer afficionados around the world. Lion Stout will remain the same signature brew you've come to know and love as Sinha.

Originating from the island of Ceylon, known for its legendary folklore, the legacy of the Lion roared into life in 1881. Unleashing its distinctly bold flavour through time-honoured recipes, the daring taste of Lion made its mark and became a revered name in the island. In 1998, the Lion ventured into uncharted territories, crossing borders to establish its rightful dominion in over 19 countries, triumphing over the palates of beer enthusiasts worldwide.

Today, Lion Brewery stands as a testament to the enduring legacy of time, steeped in tradition, and a relentless commitment to crafting beers that pack a punch. Skillfully fusing age-old recipes with state-of-the-art brewing techniques, Lion will continue its reign of dominance in Canada, bringing you a flavour that transcends generations.

**ONLY** STOUT IN ASIA TO BE LISTED IN 300 BEERS TO TRY BY ROGER PROTZ

**ONLY** BEER IN THE WORLD ENDORSED BY MICHAEL JACKSON THE LEGENDARY BEER WRITER

99/100 ratebeer




**AVAILABLE IN 473ML CANS AT**

LCBO
LCBO.COM

BEER STORE
THEBEERSTORE.CA

FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020 OR
EMAIL FRED@FINEBEERS.CA

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழரசினை அழித்து தான் சார்ந்தவர்களை வாழவைத்த தலைவர் இரா.சம்பந்தன்

## "தனது அரசியல் அனுபவம், சட்டப்புலமை, ஆளுமை என்பவற்றைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய எதனையும் பெற்றுக் கொடுக்காது, தமிழ் மக்களை மீண்டும் எதிர்பார்ப்பில் ஆழ்த்திச்சென்ற தலைவர்"



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தன் கடந்த 30.06.2024 அன்று இயற்கை எய்தினார். பொதுவாக ஒருவர் இயற்கை எய்திவிட்டால் அவர் தொடர்பில் இரங்கல் தெரிவிப்பது தமிழர் நம் பண்பாடு. எனினும் உண்மையைக் கடந்து நாம் புகழாரம் சூட்டுவது எற்புடையது அல்ல.

இவரின் மரணம் தொடர்பாக பல்வேறு தரப்பினரும் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். பொதுவாக ஒரு இனத்தின் தலைவன் இறந்தால் மக்கள் மனங்களில் கவலை அல்லது துயரம் ஒன்றை ஏற்படுத்துவது வழக்கம் ஆனால் சம்பந்தன் ஐயா அவர்கள் நம் தமிழினத்தின் தலைவராக இருந்தபோதிலும் அவரின் இறப்புச் செய்தி எவரையும் (தென்னிலங்கை தேசத்தைத் தவிர) கவலைகொள்ள வைக்கவுமில்லை, அதற்கான எந்தச் சாத்தியப்பாடுகளும் காணப்படவில்லை. ஆனால் சம்பந்தன் ஐயா அவர்கள் இறந்தது தொடர்பாக எந்த சமூக ஊடகத்தினை பார்க்கின்ற போதிலும் அவர் தொடர்பான எதிர்மறையாக கருத்துக்களே அதிகம் பகிரப்படுகின்றன. இதனை உற்றுநோக்கும் போது தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் தமது எதிர்பார்ப்புக்களை அவர் மீது கொண்டிருந்தார்கள் என்பதற்கும் அதனால் ஏற்பட்ட வலியை வெளிக்காட்டுவதாகவே உள்ளது.

ஏனெனில் அனைத்து தரப்பிரனரையும் நம்பக்கூடிய வகையில் செயற்பட்டதுடன் மட்டுமன்றி பல்வேறு தரப்பினரும் இவரால் மட்டுமே இதைச் செய்ய முடியும் என்று நம்பும் அளவிற்கு கருத்துக்களை காலத்திற்கு காலம் முன்வைத்தும் வந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் அவர்கள் ஒன்றிணைக்கக் கூடிய தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி அதற்கு பொருத்தமான தலைவர் என்ற எண்ணப்பாட்டில் இவரை தலைவராக நியமித்தபோதிலும் இவர் தென்னிலங்கை தேசத்தின் விசுவாசியாகவே செயற்பட்டார். எனினும் காலப்போக்கில் இவரின் செயற்பாடுகளில் விரக்தியுற்ற பலர் அதிலிருந்து விலகிக் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி தானும் விடுதலைப்புலிகளின் கொலைப் பட்டியலில் இருந்ததாக பாராளுமன்றத்தில் தெரிவித்ததன் மூலம் அவர் தான் தமிழினத்தின் தலைவர் அல்ல தென்னிலங்கை தேசத்தின் ஆதரவில் அவர்களைக் காப்பாற்ற வந்த தூதுவன் என்பதை பறைசாற்றியுள்ளார்.

இந்தியாவில் தமிழ்நாட்டிற்கு ஒரு கருணாநிதி போல் எமது இலங்கை தேசத்தின் தமிழ் இனத்திற்கு ஒரு தலைவராக இரா.சம்பந்தன் அவர்கள் செயற்பட்டுள்ளதைக் காணலாம்.

இவர் அரசியல் தந்திரசாலி என்று குறிப்பிடுவதில் மிகையில்லை ஆனால் அவர் தான் சார்ந்தவர்கள் வாழ தன்னுடைய அரசியல் நலன்களைப் பயன்படுத்தியதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தன்னை விட எதிர்காலத்தில் சிறந்த தலைவர்கள் எவரும் உருவாகக் கூடாது என்பதுடன் தென்னிலங்கை தேசத்திற்கு தனது விசுவாசத்தை காட்டும் நோக்குடன் தனது அரசியல் வாரிசாக சுமந்திரனை விட்டுச் சென்றுள்ளார்.

அத்துடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றல் மிக்கவர், அரசியல் அனுபவசாலி, வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சிறந்த முறையில் கையாளக்கூடியவர். ஒரு அரசியல் கட்சியை வழிநடத்தக் கூடிய தலைமைத்தவப் பண்புகளைக் கொண்டவர்.

இவையனைத்தும் இருந்தும் அவர் தனது ஆற்றலை - அரசியல் அனுபத்தை தமிழ்மக்களுக்காக - தமிழ் இனத்துக்காக பயன்படுத்தவில்லை.

உண்மையில் ஓர் இனத்தில் அரசியல் தலைவன், அல்லது வழிகாட்டி இறந்து விட்டால், அந்த இன மக்கள் கண்ணீர்விட வேண்டும், அல்லது கவலை கொள்ள வேண்டும் அல்லது அனுதாபத்தை தெரிவிக்க வேண்டும், அந்த இனம் சார்ந்த தேசம் தனக்கு ஏற்பட்ட இழப்பை - சோகத்தை ஏதோவொரு வகையில் வெளிப்படுத்த வேண்டும், ஆனால் அவை எதுவும் இங்கு நடப்பாதாக தெரியவில்லை.

இரா. சம்பந்தன் காலமாகிவிடால் என்ற செய்தி ஒரு சாதாரண செய்தியாகக் கடந்து சென்றதைப் பார்த்தபோதுதான் இரா.சம்பந்தன் அரசியல் செயற்பாட்டால் தமிழ் மக்கள் எத்துணை தூரம் விரக்தியும் வெறுப்பும் கொண்டுள்ளனர் என்பது தெரிய வந்தது.

ஆம் தமிழ் மக்கள் இரா. சம்பந்தனை நம்பினர். அவர் தனது அரசியல் ஆளுமையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தருவார் என எதிர்பார்த்தனர். எனினும் தமிழ் மக்கள் இரா.சம்பந்தன் மீது வைத்திருந்த நம்பிக்கையை அவர் இம்மியளவும் புரிந்துகொள்ளவில்லை. அன்றி அந்த நம்பிக்கைக்கு விசுவாசமாகச் செயற்படவும் இல்லை.

மாறாக இரா சம்பந்தன் தன்மை ஒரு கொழும்பு வாசியாகக் காட்டிக் கொண்டதுடன் தனக்குக் கிடைத்த கட்சித் தலைமை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அடிப்படையாகக் கொண்டு சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்று சுகபோகமாக வாழ்ந்தாரேயன்றி, எல்லாம் இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நிற்கின்ற தமிழ் மக்களை அவர் கிஞ்சித்தும் நினைக்கவில்லை.

சுருங்கக்கூறின் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யாத அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் கந்தறுத்து ஈற்றில் இலங்கை தமிழரசுக்கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகளை ஏற்படத்தி தனக்குப் பின் தமிழனுக்கு அரசியல் தலைமையே இருக்கக் கூடாது என்பது போல எல்லாவற்றையும் நிர்மூலமாக்கி சிங்களப் பேரினவாதத்துக்குப் பேருதவி செய்துவிட்டு மறைந்து விட்டார்.

அத்துடன் தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி அவர் தென்னிலங்கை தேசத்திற்கு செய்த நன்றிக்கடன்களுக்கு கைமாறாக தென்னிலங்கை தேசம் அவரை எதிர்க்கட்சித் தலைவர் எனும் கதிரையில் அமர்த்தி அழகுபார்த்தது. அத்துடன் தனது இன மக்களின் துன்ப துயரங்களைக் கூடக் கண்டுகொள்ளாது ஒவ்வொரு முறையும் பொங்கலுக்கு தீர்வு பெற்றுத் தருகிறேன் தீபாவளிக்கு தீர்வு பெற்றுத் தருகிறோம் என்று ஒவ்வொரு முறையும் மக்களை ஏமாற்றி வந்துள்ளார். இவரின் வருகையினால் கதிர்காமர், நிலன் திருச்செல்வம் போன்றவர்கள் புனிதர்களாக எண்ணுமளவுக்கு சூழ்நிலை தோன்றியுள்ளது.

### சிங்களத் தலைவர்கள் இரங்கல்

இரா. சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்துவதில் தமிழ்த் தரப்பினை காட்டிலும் சிங்கள அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் தமது இரங்கல்களையும் அவர் இலங்கை தேசத்திற்கு ஆற்றிய விசுவாசத்தையும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சொல்லி வருகின்றார்கள், அந்தவகையில், இரா.சம்பந்தனின் மறைவு தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தி இரங்கலைத் தெரிவித்த ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கையில், மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன், ஒருமுறை என்னுடன் உரையாற்றும் போது, "ரணில், நான் நாட்டைப் பிரிப்பேன் என்று நினைக்கிறீர்களா? நான் சிறுவனாக இருந்த போது, 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரம் பெறுவதைப் பார்க்கச் சென்றிருந்தேன்" என குறிப்பிட்டார். அதனைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைக்கவில்லை. நம்மில் பலர் அப்போது பிறக்கவே இல்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்திய போதிலும், அவர் எப்போதும் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக பங்காற்றினார் என குறிப்பிட்டார்.

### மீண்டும் ஏமாற்றப்படாமை சென்றார்

மற்றுமொரு ஜனாதிபதியுடனும் கதைத்து ஏமாறுவதற்கு முன்பாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் காலமாகிவிட்டதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டி தீர்வு தரப்பட வேண்டும் என்பதில் இலங்கையின் எட்டு ஜனாதிபதிகளுடன் பேசி, நம்பி ஏமாந்த தலைவராகவே சம்பந்தன் பார்க்கப்படுகின்றார்.

அத்தோடு, சம்பந்தன், அரசியலுக்கு வருகின்ற போது தான் முன்னிலையாகி இருந்த வழக்குகளை முடித்து விட்டே வருவேன் எனக் கூறி மக்களின் உரிமைக்காகவே தனது தொடர் போராட்டத்தினை அகிம்சை வழியில் முன்னெடுத்தார் என்ற தோற்றப்பாடும் உண்டு.

### கட்சிக்குள் வந்த எதிர்ப்பு

"கட்சியின் தலைமைப் பதவியில் இருக்கும் சம்பந்தன் விலக வேண்டும் எனவும், வயது முதிர்ச்சியின் காரணமாக தொடர்ச்சியாக சம்பந்தனுக்கு நாடாளுமன்றத்திற்கு வர முடியாது. இதனால் அவர் பதவி விலக வேண்டும்" என அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட - அறிமுகப்படுத்தப்பட்ட அவரின் விசுவாசியினாலேயே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்து அவருக்கு பாரிய ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தியதாக கட்சி உறுப்பினர்களால் முன்னர் குறிப்பிடப்பட்டது. அத்துடன் அவருடன் கதைத்து அவரை பதவி விலகச் செய்வதற்காக குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இதற்கு முன்னர் இருந்த தந்தை செல்வா உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் வயது முதிர்ந்தாலும் கூட கட்சிக்குள் மிகவும் மரியாதையாக நடத்தப்பட்டிருக்கின்றனர். இவ்வாறான நிலையில், நீண்ட அரசியல் வரலாற்றைக் கொண்ட சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்று கூறி அவரின் இறுதிக் காலத்தில் அரசியல் ரீதியாக பாரிய அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அதற்கு இணங்கவில்லை.

"இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் அவருடைய முதுமையின் பொருட்டு நடைமுறை அரசியலில் பங்களிப்புச் செய்யமுடியாதிருப்பதனால் அவர் தனது பதவியைத் துறக்க வேண்டும் என்று நாங்கள் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றோம். விசேடமாக நான் அந்த விடயத்தில் கரிசனைகளைக் கொண்டிருக்கின்றேன் என்றும் சுமந்திரன் தெரிவித்திருந்தார். அதற்கு சம்பந்தன் ஐயா அவர்கள் பின்வருமாறு கூறியிருந்தார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராக தெரிவு செய்திருக்கின்றார்கள். அவர்கள் எனது உடல்நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டு தன்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்து பதவி விலகாது தனது பதவியைக் காத்துக் கொண்டார்.

எனினும், திருகோணமலை மக்களை பிரதிநிதித்துவம் செய்து செயற்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு பிரதிநிதியை நியமித்தாலும் மக்கள் அவரைத் தெரிவு செய்திருப்பன் என்பது சம்பந்தனுக்கு தெரியாதது ஒன்றும் அல்ல.

இதேவேளை, சம்பந்தனின் அரசியலுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கருதிய பலர் இன்று சம்பந்தனின் மரண வீட்டில் தங்களை மிகச் சிறந்த ஆளுமையாளர்களாகக் காட்டிக் கொள்ள முயல்கின்றனர், தங்களது இருப்பை தக்க வைத்துக் கொள்ள சம்பந்தனின் மரண வீட்டையும் தங்களது சாதகமாக பயன்படுத்தி பலர் அரசியல் செய்ய முற்படுவதையும் காணலாம்.

என்ன செய்வது தமிழ் மக்கள் நம்பிக்கை கெட்ட சோகத்தோடு, கருடபுராணம் கூறும் நியமம் நடந்தாகும் என்ற நம்பிக்கையோடு அமைதி கொள்கின்றனர்.

**சத்தியன் - கனடா**

# ஸ்காபுறோ நகரில் திறந்து வைக்கப்பெற்ற "விஜயா நகை மாளிகை" தங்க ஆபரண விற்பனை நிலையம்

ஸ்காபுறோ நகரில் கடந்த 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று 3341 Markham Road - Unit 127, Scarborough (Markham & Steeles) என்னும் விலாசத்தில் திறந்து வைக்கப்பெற்ற "விஜயா நகை மாளிகை" தங்க ஆபரண விற்பனை நிலையத்தின் திறப்பு விழாவில் அதன் உரிமையாளர்கள் யுகநீதரூபன் - விஜயதர்சினி தம்பதியின் அழைப்பை ஏற்று ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சர் றேமன்ட் சோ அவர்களும் துணை அமைச்சர் விஜேய் தணிகாசலம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

அத்துடன் அவர்கள் இருவரும் நிறுவனத்தின் வாசலில் கட்டப்பெற்றிருந்த "நாடாவை" வெட்டி "விஜயா நகை மாளிகை" தங்க ஆபரண விற்பனை நிலையத்தையும் திறந்து வைத்தனர்.

முதலில் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் விசேட விருந்தினர்கள் என அழைக்கப்பெற்றிருந்த அன்பர்கள் அனைவரும் நாதஸ்வர - தவில் வாத்தியங்கள் ஒலிக்க, நிலையத்தின் வாசலுக்கு அழைத்துவரப்பெற்றனர்.













மிகவும் கோலாகலமாக நடைபெற்ற இந்த திறப்பு விழாவில் நண்பர்கள் உறவினர்கள் - ஊடகவியலாளர்கள் - பத்திரிகைகளின் சார்பில் அதன் பிரதம ஆசிரியர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

"விஜயா நகை மாளிகை" தங்க ஆபரண விற்பனை நிலையத்தின் உரிமையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று விருந்துபசாரத்தை வழங்கிய மிகவும் உற்சாகமாக திறப்பு விழாவை நடத்தினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வாழ்த்த விரும்புவோர் 3341 Markham Road - Unit 127, Scarborough (Markham & Steeles) என்னும் விலாசத்தில் அமைந்துள்ள "விஜயா நகை மாளிகை" தங்க ஆபரண விற்பனை நிலையத்திற்குச் செல்லவும்.

**- சத்தியன்**

- படங்கள்: **S. SEITHY GUNA - Thank-you**



# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோத்ஸவ திருநாட்களில் நடைபெறும் விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்

## 14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை

**07.07.2024 ஞாயிற்றுக்கிழமை – சமயதீட்சை**
காலை 7:45 மணி முதல் 11:00 மணி வரை அடியார்களுக்கு "சமயதீட்சை" வழங்கப்படும்.

**12.07.2024 வெள்ளிக்கிழமை – மாலை**
விக்னேஸ்வரபூஜை. அனுக்ஞை. கணபதி ஹோமம். சங்காபிஷேகம்.

**13.07.2024 சனிக்கிழமை**
வாஸ்துசாந்தி நடைபெறும்.

**14.07.2024 ஞாயிற்றுக்கிழமை** காலை 7:45 மணி முதல் விக்னேஸ்வரபூஜை, கும்பபூஜை, ஹோமம், அபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை. காலை 10:00 மணிக்கு விஷேட பூஜை. காலை 11:00 மணிக்கு வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கணபதிதாளம், வேத, கீத, ஸ்தோத்திர, திருமுறை உபசாரங்கள் தொடர்ந்து நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி, விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் என்பன நடைபெறும்.

**காலை**

| | |
|---|---|
| 7:45 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 10:00 மணிக்கு | விசேடபூஜை |
| 11:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் |

**மாலை**

| | |
|---|---|
| 4:00 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 6:00 மணிக்கு | சாயரட்சைப்பூஜை |
| 7:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கலைநிகழ்ச்சி தொடர்ந்து விபூதி பிரசாதம் வழங்கல் |








**14.07.2024 ஞாயிறு – 1ம் நாள்**
ஓங்கார கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் தாளவாத்ய லயவின்யாசம்

**15.07.2024 திங்கள் – 2ம் நாள்**
மயூர கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வயலின் ஆராதனை

**16.07.2024 செவ்வாய் – 3ம் நாள்**
சூரியப்பிரபை வடிவக் காட்சி
கலைஞர்களின் வாத்ய ஆராதனை

**17.07.2024 புதன் – 4ம் நாள்**
வித்யா கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வீணை ஆராதனை

**18.07.2024 வியாழன் – 5ம் நாள்**
அனந்தசயன வடிவக் காட்சி
அந்தணர்களின் வேதபாராயணம்

**19.07.2024 வெள்ளி – 6ம் நாள்**
சிவலிங்கபூஜை வடிவக் காட்சி
கைலாச வாகன அலங்காரக் காட்சி

**20.07.2024 சனி – 7ம் நாள்**
நர்த்தன கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் நடன சமர்ப்பணம்

**21.07.2024 ஞாயிறு – 8ம் நாள்**
கப்பல் திருவிழா
கப்பல் வடிவ அலங்காரக் காட்சி

**22.07.2024 திங்கள் – 9ம் நாள்**
சங்கீத கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை இசை ஆராதனை

**23.07.2024 செவ்வாய் – 10ம் நாள்**
திருமஞ்சத் திருக்காட்சி
அழகிய மஞ்ச அலங்காரக் காட்சி

**24.07.2024 புதன் – 11ம் நாள்**
நம்பியாண்டார் நம்பி திருமுறை
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகம், திருமுறை பாராயணம்

**25.07.2024 வியாழன் – 12ம் நாள்**
மாம்பழத் திருவிழா
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகமாக வழங்கப்படும்

**26.07.2024 வெள்ளி – 13ம் நாள்**
சப்பற அலங்காரக் காட்சி
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு



**27.07.2024 சனி – 14ம் நாள்**
தேர் அலங்காரக்காட்சி


**28.07.2024 ஞாயிறு – 15ம் நாள்**
தீர்த்தத் திருநாள்
காலை: விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜை
மாலை: திருவூஞ்சல்

**29.07.2024 திங்கள்**
பூங்காவனம்
சங்கீத இசை நிகழ்ச்சி

**30.07.2024 செவ்வாய்**
வைரவர் மடை
காலை: பிராயச்சித்த அபிஷேகம். மாலை: வைரவர் மடை





விரத காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறவிருக்கும் அலங்கார உபசார பூஜை வழிபாடுகளில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Aadi Amavasai Viratham**
ஆடி அமாவாசை விரதம்
(பிதிர்தர்ப்பணம்)
03.08.2024 சனிக்கிழமை

**Aadipoora Viratham**
ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா
06.08.2024 வியாழக்கிழமை

**Varaluxmi Viratham**
வரலட்சுமி விரதம்
(சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
16.08.2024 வெள்ளிக்கிழமை




## அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்". "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு. ஆலயஸ்தாபகர். முதல்வர்




1.416.291.8500 www.vinaayagar.com vinaayagar@gmail.com vinaayagar

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் கருங்கல் திருக்கோவில்

## சங்குஸ்தாபன மஹோத்ஸவம்

## அடிக்கல்நாட்டு விழா அழைப்பிதழ்

**July 11th & July 12th, 2024**





**12.07.2024**

**வெள்ளிக்கிழமை**

**காலை 10:00 மணிமுதல் 11:15 மணிவரையுள்ள**

சுப நல்வேளையில்

ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல்

ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனம்



கருங்கல் திருக்கோவில் ஸ்தபதியார்

"சிற்பக்கலையரசன்" திரு. சரவணமுத்து ஜெயராஜா

"சிற்பக்கலாரத்தினம்" திரு. சக்திவிநாயகம்

**11.07.2024 வியாழக்கிழமை**

**அதிகாலை 4:10 மணிமுதல்**

விக்னேஸ்வர பூஜை, அனுக்ஞை, புண்யாகவாசனம், மஹாகணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி, பூமிபூஜை.

**காலை 7:15 மணிமுதல்**

சங்குகளுக்கு விநாயகர் சகஸ்ரநாம அர்ச்சனை-ஹோமம், கணபதி மூல மந்திர, மாலா மந்திர, காயத்திரி மந்திர ஹோமம், ருத்ர த்ருசதி அர்ச்சனை-ஹோமம், லலிதா த்ருசதி அர்ச்சனை-ஹோமம், தேவிகட்கமாலா அர்ச்சனை-ஹோமம்.

**மாலை 4:30 மணிமுதல்**

சங்குகளுக்குரிய விஷேட பூஜைகள்: விஷ்ணு த்ருசதி அர்ச்சனை-ஹோமம், மஹாலக்ஷ்மி த்ருசதி அர்ச்சனை-ஹோமம், சத்ருசம்ஹார த்ருசதி அர்ச்சனை-ஹோமம், நவக்கிரக சூக்த ஹோமம், பைரவர் அஷ்டோத்திர அர்ச்சனை-ஹோமம், அஸ்திர ஹோமம்.

**12.07.2024 வெள்ளிக்கிழமை**

**காலை 7:15 மணிமுதல்**


விநாயகர் வழிபாடு, புண்யாகவாசனம், கருங்கல் ஆலய திருப்பணி உபயகாரர்கள் மற்றும் அடியவர்களுக்குரிய சங்கல்பம், விஷேட ஷண்ணவதி திரவிய ஹோமம், கோ(பசு) பூஜை, அஸ்வ(குதிரை) பூஜை மஹாபூர்ணாகுதி.

காலை 10:00 மணிமுதல் 11:15 மணிவரையுள்ள

சுப நல்வேளையில்

ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல் ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனம் அடிக்கல்நாட்டு விழா நடைபெற்று.

மிகவும் சிறப்பாகவும் விமர்சையாகவும் நடைபெறவிருக்கும் சங்குஸ்தாபன அடிக்கல் நாட்டுவிழாவில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"

சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்

ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை.

ரொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

**3025 Kennedy Rd, Unit 10,**
**Scarborough ON M1V1S3**


1.416.291.8500

www.vinaayagar.com

vinaayagar

# மரண அறிவித்தல்

தோற்றம்:
20 - 05 - 1940



மறைவு:
02 - 07 - 2024

# திருமதி. திலகமணி (பாப்பா) குமரகுருபரன்

(மலேசியா, யாழ்ப்பாணம் திருநெல்வேலி)

**மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் திருநெல்வேலி, ஊர்காவற்றுறை கரம்பொன், கொழும்பு, கனடா ரொரன்ரோ ஆகிய இடங்களில் வசித்து வந்தவருமான திருமதி. திலகமணி (பாப்பா) குமரகுருபரன் அவர்கள் 02-07-2024 செவ்வாய்கிழமை அன்று தனது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி. நமசிவாயம் - நாகம்மா தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பகவதியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,
காலஞ்சென்ற செல்லத்துரை குமரகுருபரன் (சாவகச்சேரி நகரசபை சுகாதார பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும்,
காலஞ்சென்றவர்களான கமலாதேவி - சதாசிவம், யுகநாதன், கேசவன் மற்றும் மகேசன் - ராணி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,
சிவகுமார் (கனடா), திலகராணி (ஜேர்மனி), பரமேஸ்வரன் (கனடா), உருத்திராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,
காலஞ்சென்றவர்களான சத்தியசீலன் - கன்னிகா பரமேஸ்வரி, உருத்திரசீலன - நவரட்ணதேவி, குகதாஸ் மற்றும் திருமதி. கன்னிகா பரமேஸ்வரி - ராஜகோபால் (லண்டன்), திருமதி. தனலக்ஷ்மி - நடேஸ்வரன் (கனடா), திருமதி. பிருந்தாதேவி - குகன் (இலங்கை) ஆகியோரின் மைத்துனியும்,
கோகிலா (கனடா), யோகேஸ்வரன் (யோகன், ஜேர்மனி), சசிகலா (கனடா), குகதாஸ் (குகன், கனடா) ஆகியோரின் மாமியும்,
சிந்தூரி, கஸ்தூரி, காயத்திரி. சங்கர். கவிநயன் (கவி). சாம்பவி ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,
மீரா, மாயா ஆகியோரின் பூட்டியமாவார்.

**அன்னாரின் பூதவுடல் 737 Dundas Street East, Mississauga, Ontarioவில் அமைந்துள்ள St.John's Dixie Crematorium தில் *06-07-2024 சனிக்கிழமை மாலை 5:00 மணிமுதல் 9:00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 07-07-2024 அன்று காலை 5:30 மணி முதல் மாலை 7:45 மணிவரை* ஈமைக்கிரியைகள் நடைபெற்று அதனைத்தொடர்ந்து அதே இடத்தில் தகனம் செய்யப்படும்.**

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:** சிவகுமார் (சிவா - மகன்): (647) 504-6779
பரமேஸ்வரன் (ஈஸ்வரன் - மகன்): (416) 722-5802
குகன் (மருமகன்): (416) 624 9261

# ஒன்றுபட்ட இலங்கைக்குள் தன்னாட்சி தமிழரசை உருவாக்க வேண்டும் என்ற இலட்சியம் கொண்டவர் சம்பந்தன் அவர்கள் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - கனடா



ஆறு சகாப்தங்களுக்கு மேலாக ஓயாது ஒழியாது தமிழ்மக்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராடிவந்த சம்பந்தன் ஐயாவின் குரல் ஓய்ந்துவிட்டது. கடந்த சில ஆண்டுகளாக அவரது உடல்நலம் குறைந்து காணப்பட்டாலும் அவரது குரலில் தளர்ச்சி இருக்கவில்லை.

சம்பந்தன் ஐயா தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர்களான தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோர் வழியில் அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் திறம்படச் செய்தவர். தமிழரசுக் கட்சியுடன் ஆன அவரது தொடர்பு 1961 ஆம் ஆண்டு நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தோடு தொடங்கியது. அவர் கைது செய்யப்பட்டு பனாக்கொடை தடுப்பு முகாமில் சிறிது காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அவரது முழுநேர அரசியல் நுழைவு 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலையில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக போட்டியிட்டு வென்றதன் வாயிலாகத் தொடங்கியது.

1983 கறுப்பு யூலையில் மூவாயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் தனி நாடு கோருவதை தடைசெய்யும் கொண்டு வரப்பட்ட இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றத்தில் உறுதிமொழி எடுக்க மறுத்து அதன் அமர்வுகளை மூன்று மாதங்கள் தொடர்ந்து புறக்கணித்ததன் விளைவாக சம்பந்தன் ஐயா தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 1983, செப்டம்பர் 7 இல் இழந்தார்.

1985 ஆம் ஆண்டு திம்புவில் நடந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக பங்குபற்றிய மூன்று முக்கிய தலைவர்களில் சம்பந்தன் ஐயாவும் ஒருவர்.

1987 இல் நிறைவேற்றப்பட்ட 13 ஏ சட்ட திருத்தத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த இராசீவ் காந்தி அவர்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி 28 ஒக்தோபர், 1987 ஒரு நீண்ட கடிதம் எழுதியது. அந்தக் கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் மு.சிவசிதம்பரம், பொதுச் செயலாளர் அ.அமிர்தலிங்கம் மற்றும் துணைத் தலைவர் இரா.சம்பந்தன் கையெழுத்திட்டிருந்தனர்.

2015 செப்டெம்பர் 3 முதல் 2018 டிசம்பர் 18 வரை இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித்தலைவராகவும் சம்பந்தன் ஐயா இருந்துள்ளார். எதிர்க்கட்சித்தலைவராக விளங்கிய அவர், தந்தை செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் ஆகியோருக்கு அடுத்து, தென்னிலங்கை அரசியல் தலைவர்களாலும் வெளிநாட்டு இராசதந்திரிகளாலும் பெரிதும் மதிக்கப்பட்ட தமிழ்மக்களின் ஆளுமைமிக்க தலைவராக விளங்கினார்.

2009 மே 18 இல் போர்முடிந்த கையோடு பயங்கரவாதத்தை "ஒழித்துக் கட்டிய" சிறிலங்கா அரசைப் பாராட்டி மே 27 இல் இந்தியா கொண்டுவரப்பட்ட தீர்மானம் 29 நாடுகள் ஆதரவாகவும் 12 நாடுகள் எதிராகவும் வாக்களித்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்டது. 2011 ஆம் ஆண்டுவரை ஐநாமஉ பேரவை சிறிலங்கா அரசை ஆதரித்தே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தப் போக்கு 2011 ஆம் ஆண்டுவரை நீடித்தது. அதை மாற்றி அமைத்தவர் சம்பந்தன் ஐயா அவர்கள். அந்த ஆண்டு ஒக்தோபர் மாதக் கடைசியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு ஒன்று சம்பந்தன் ஐயா தலைமையில் அமெரிக்கா சென்று வெளியுறவு அமைச்சு அதிகாரிகளோடு இரண்டு நாட்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியது. அதன் பின்னரே 2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஐநாமஉ பேரவையில் சிறிலங்கா அரசுக்கு எதிரான தீர்மானங்கள் அடுத்தடுத்து அமெரிக்காவினாலும் அதன் நட்பு நாடுகளாலும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஈழம்வாழ் தமிழ்மக்களுக்கு எதிரான மனிதவுரிமை மீறல்கள், போர்க்குற்ற விசாரணைகள், பொறுப்புக்கூறல்கள், மீள்நல்லிணக்க முயற்சிகள் இன்று பேசுபொருளாக மாறியுள்ளது. அந்தப் பெருமை சம்பந்தன் ஐயாவின் சாணக்கிய அரசியலையையே சாரும்.

"முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால் அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால் நாட்டின் நன்மை கருதி - நாட்டில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி - தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள் நல்ல முடிவை எடுக்க வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் வேட்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும், வடக்கு - கிழக்கில் வரலாற்று ரீதியாகத் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்" என்பன சம்பந்தன் ஐயாவின் பெருவிருப்பாக கடைசிவரை இருந்தது.

தமிழ்மக்கள் இழந்த அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க, இணைப்பாட்சி அரசியல்முறைமையின் கீழ் தமிழ்மக்களின் வரலாற்றுத் தாயக பூமியில் த்தில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் இணைப்பாட்சி கட்டமைப்பின் கீழ் ஒரு தன்னாட்சி தமிழரசை உருவாக்க வேண்டும் என்ற சம்பந்தன் ஐயாவின் இலட்சியம் கைகூட இதய சுத்தியோடு உழைப்பதே அவருக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

சம்பந்தன் ஐயாவின் பிரிவினால் வாடும் அவரது துணைவியார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பிரான்ஸ் தேசத்தின் பாரிஸ் நகரில் நடைபெற்ற பவானியின் "வியன்களம்" "கொற்றவை" ஆகிய நூல்களின் அறிமுக விழா




09.06.2024 அன்று ஞாயிறுக்கிழமை கனடா வாழ் கவிஞர் பவானி தர்மகுலசிங்கம் அவர்களது "வியன்களம்" நூல், மற்றும் கொற்றவைப் பாடல்கள் தொகுப்பு இறுவெட்டு அறிமுகவிழா பிரான்ஸ் தலைநகர் பரிசில் மாலை இடம்பெற்றது.

பேச்சாளர் திரு. அமிர்தநாயகம் சத்தியநாதன் அவர்கள் நிகழ்வைத் தொகுத்து வழங்கச் சுடரேற்றல், அகவணக்கத்தைத் தொடர்ந்து, சிறுமி இமையாவின் தேவாரம், இசை ஆசிரியர் தேவராஜா அவர்களது மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்து, என்பன இசைக்கப்பட்டுப் பல்கலைகழக மாணவி செல்வி பிரவீனாவின் வரவேற்புரை, மற்றும் நடன ஆசிரியர் அருள்மோகன் முருகையா அவர்களது மாணவிகளின் வரவேற்பு நடனம் போன்றவற்றோடும் ஆரம்பமான விழாவுக்கு, முன்னிலை உரையைத் தமிழ் விரிவுரையாளர் யசோதா தர்மலிங்கம் அவர்களும், அறிமுக உரையை ஊடகவியலாளர் அனுசயா ஆனந்தரூபன் அவர்களும் வழங்கியிருந்தனர்.

மேலும் நூலுக்கான மதிப்புரையைப் பாட்டரசர் பாரதிதாசன் அவர்கள் சிறப்புற வழங் கியதுடன், தனது கம்பன் கழகப் பெயர் பொறித்த போர்வையுடன், படைப்புக்களையும் நூலாசிரியருக்கு அன்பளிப்பாக அளித்திருந்தார்.

கொற்றவைப் பாடல் தொகுப்பிற்கான நயவுரையைக் கவிஞர் திரு. எட்வேர்ட் நிக்ஸ் அவர்கள் ஆற்றியிருந்தார். மேலும் கவிஞரும் பேச்சாளருமான திரு. சின்னராஜா கணேஷ் மற்றும் ஊடகவியலாளர் திரு. பாஸ்கரலிங்கம் பார்த்தீபன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கியிருந்தனர்.

முதன்மைப் பிரதியைச் சாதனா சுப்பர் மார்சேயின் உரிமையாளர் திருமதி. பகீரதி செந்தில் நாதன் அவர்கள் ஏற்றிருந்ததோடு, சிறப்பு விருந்தினர்கள் மற்றும் தமிழ் தேசியப் பற்றாளர்கள், நூல் ஆர்வலர்கள் எனப் பலரும் வருகை தந்து நூல்களைப் பெற்றிருந்தனர்.

செல்வி சாதனாவின் மேதகு புகழைக் கூறும் நடனம், கவிஞர் பவானியின் போர்க்காலக் கவிதைகளைப் போலவே சிறப்பைத் தந்திருந்தது. புலம்பெயர் நாடுகளில் ஈழத் தமிழர்களது அகதிவாழ்வு ஆரம்பமான கடினமான காலங்களான 1987 களில் இருந்து, போர்க்காலம் வரையான காலத்தின் வாழ்வியலையும், போரின் அறம் மற்றும் வீரத்தைப் பாடுவதாயும் கவிஞர் வியன்களம் இருந்ததோடு அந்தக்காலத்தில் துணிச்சலான ஒரு பெண் கவிஞராகவும் திருமதி. பவானி இருந்தார் என்பதைகூறிச் சிறப்பித்த அந்தச் சபையில், அவரது கொற்றவைப் பாடல்கள் தொகுப்பில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாடலுக்கு நடன ஆசிரியர் திருமதி. நிஷாந்தி ஆடிய நடனம் விழாவுக்கு மேலும் சிறப்பை தந்திருந்தது.

கவிஞர் பவானி அவர்களது ஏற்புரையோடும், விழா ஏற்பாட்டாளர்களான மிஷன் தமிழ் குழுவினர் சார்பாகத் தமிழ் விரிவுரையாளரான பிரியா லவன் அவர்களது நன்றியுரையோடும் விழா இனிதே நிறைவுற்றிருந்தது.



- பாரிஸிலிருந்து நிலாமகள்






# மரண அறிவித்தல்

தோற்றம்:

20 - 01 - 1953



மறைவு:

28 - 06 - 2024

## திருமதி. ஜெயலட்சுமி கந்தசாமி

(இளைப்பாறிய கணித ஆசிரியை - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாசாலை, பேராதனை தமிழ் மகாவித்தியாலயம், மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலயம், இமையாணன் அ.த.க பாடசாலை)
(முன்னாள் கனடா CIBC வங்கியின் உத்தியோகத்தர்)

**யாழ் இமையாணன் மேற்கு உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஜெயலட்சுமி கந்தசாமி அவர்கள் ஜூன் மாதம் 28ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று ஒன்றாரியோ கனடாவில் காலமானார்.**

அன்னார் காலம்சென்ற சேனாதிராஜா - இராசம்மா தம்பதியரின் அருமை மகளும், காலம்சென்ற பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும்,

கந்தசாமி அவர்களின் ஆருயிர் மனைவியும், சேயோனின் அன்புத் தாயும்,

சத்தியலட்சுமி, இரவீந்திரநாதன், இராஜதிலகம், காலம்சென்ற சித்திராலட்சுமி, சுரேந்திரநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும்,

காலம்சென்றவர்களான அற்புதசுந்தரி, சுப்பிரமணியம், முத்துக்குமாரசாமி, ஆறுமுகசுவாமி, லோகநாயகி ஆகியோரின் அன்பு மருமகளும்,

குமாரசுப்பிரமணியம், பராசக்தி, தனலட்சுமி, மங்கையர்க்கரசி, இந்திராதேவி, சித்திராதேவி, முரளிதரன், குமுதினி, முகுந்தன், வாஹினி, மாதினி, ஜனனி, துஷ்யந்தன், மற்றும் அமரர் பாலகிருஷ்ணேஸ்வரன், இரஞ்சிதராணி, விபலினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

பவஹாரிணி, நாதஸ்வரூபிணி (இனிமை), வித்தியானந்தி ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும்,

சியாமசுந்தரன், தாரிணி, பாமினி, அபிராமி, கோசலைகோபன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

***அன்னாரது பூதவுடல் Chapel Ridge Funeral Home (8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1) இல் 07-07-2024 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 9:30 மணி முதல் மதியம் 12:00 மணி வரை (கனடா நேரம்) அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர், அங்கே இறுதிக்கிரியைகள், மதியம் 12:00 மணி முதல் 1:30 மணி வரை நடைபெற்று பிற்பகல் 2:00 மணியளவில் Highland Hills Crematorium இல் அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: சேயோன் (மகன்)
"சத்திய வாசா" குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு: கனடா - (437) 872-1499
இலங்கை - 077 801 2227



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சம்பந்தன் ஐயாவின் மறைவு கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது – குகதாசன்

பு. கஜிந்தன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதுபெரும் தலைவரும், கடந்த அரை நூற்றாண்டாகத் திருகோணமலை மாவட்டத்தைப் பிரதிநித்துவப்படுத்தி செயற்பட்டவரும், இலங்கைத் தமிழர் இனச் சிக்கலுக்கு தீர்வுக்கான அயராது உழைத்து வந்தவருமான இரா சம்பந்தன் ஐயா இயற்கை எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் க.ச.குகதாசன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட இரங்கல் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ஐயாவின் பிரிவால் வாடும் அவரது மனைவி, மக்கள், மருமகள், பேரன் உள்ளிட்ட உற்றார் உறவினர் அனைவருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் சார்பில் இரங்கலையும் துயர் பகிர்வினையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை கடற்படையால் மீனவர்களை விடுதலை செய்ய கோரி ராமேஸ்வரத்தில் வீதி மறியல் போராட்டம்!

எல்லை தாண்டி மீன்பிடித்தத குற்றச்சாட்டில் 4 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 25 இந்திய கைது செய்ததை கண்டித்தும் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் இந்திய தமிழ்நாடு பாம்பன் மீனவர்கள் கடலில் இறங்கி போராட்டம் ஒன்றினை 01-07-2024 அன்று திங்கட்கிழமை காலை முன்னெடுத்துள்ளனர்.

இதில் மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய கோரி பாம்பன் சாலை பாலத்தில் மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக ஈடுபட்டனர். மீனவர்களின் வீதி மறியல் போராட்டத்தால் மதுரை தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் நீண்ட நேரமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் பாம்பன் பகுதி நாட்டு படகு மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்ததை கண்டித்து சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் மீனவர்கள் கடலில் இறங்கி குறித்த மீனவர்களை விடுவிக்க கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மீனவர்கள் தங்களது போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ள நிலையில் மீனவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் மீனவர்கள் போராட்டம் தொடரும் என தெரிவித்துள்ளனர்.

இந்த வயிற்று பிழைப்புக்காக மீன்பிடிக்க சென்ற மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என மீனவரின் உறவினர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பாம்பன் வடக்கு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 50க்கும் மேற்பட்ட மீனவர்கள் இன்று அதிகாலை மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். இந்நிலையில் நெடுந்தீவு கடற் பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் 4 நாட்டு படகுகளையும் அதிலிருந்த இருதயராஜ், கிரேசியான், லயோனஸ் உள்ளிட்ட 25 மீனவர்களையும் கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

அங்கு முதல் கட்ட விசாரணைகளுக்கு பின்னர் மீனவர்கள் அனைவரையும் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் உரிய சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்க உள்ளனர்.

# தவறு செய்துவிட்டு போராட்டம் நடத்துவது நியாயமா? இந்தியா மீனவர்களிடம் யாழ் மீனவர்கள் கேள்வி



இலங்கை கடலுக்குள் எல்லை தாண்டி மீன்படியில் ஈடுபடுவது தவறு என நன்கு தெரிந்தும் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்ய போராட்டம் நடத்துவது நியாயமா என யாழ்ப்பாண மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் புனிதாப் பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

01-06-2024 அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்துமாறு கோரி இடம்பெற்ற கண்டப் போராட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அத்துமீறிய கடற் தொழிலாளரினால் எமது வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில் தினமும் வாழ்வாதாரத்துக்காக போராடி வருகின்றனர்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைவது சட்ட விரோதம் எனத் தெரிந்தும் தொடர்ச்சியாக எமது கடற் பரப்புக்குள் நுழைந்து எமது வாழ்வாதாரத்தை அழித்து வருகின்றனர்.

இவ்வாறு அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் போது கடற் படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் போது அவர்களை விடுவிக்குமாறு இந்தியாவில் போராட்டம் நடத்துகிறார்கள்.

எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் இந்தியா மீனவர்களிடம் இருந்து எமது மீனவர்களை பாதுகாக்குமாறு கோரி போராட்டம் நடத்தும் நிலையில் இலங்கை கடலில் நுழையும் போது கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை விடுவிக்கப் போராட்டம் நடத்துவது நியாயமா?

ஆகவே இலங்கை கடற்படையை வினயமாக கேட்டுக்கொள்கிறோம், எல்லை தாண்டி மீன்படியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துங்கள், கடற்படைக்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மோசடிகளை அம்பலப்படுத்திய சாவகச்சேரி வைத்திய அத்தியட்சகர் மீது தாக்குதல்

## வைத்திய அதிகாரிகள் சங்க வைத்தியர்கள் கடமை நேரத்தில் காடு மிராண்டித்தனம்



மோசடிகளை அம்பலப்படுத்திய வைத்திய அத்தியட்சகர் மீது தாக்குதல் - வைத்திய அதிகாரிகள் சங்க வைத்தியர்கள் கடமை நேரத்தில் காடு மிராண்டித்தனத்தைக் காட்டியுள்ளனர்.

சாவகச்சேரி ஆதார பதில் வைத்திய அத்தியட்சகர் மீது சாவகச்சேரி வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்த இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட வைத்தியார்கள் சிலர் 04-07-2024 வியாழக்கிழமை காலை தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியர் உயர் படிப்புக்காக வெளிநாடு சென்றுள்ள நிலையில் பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் அர்ச்சுனா சுகாதார அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டார்.

குறித்த வைத்தியசாலைக்கு வருகை தந்த வைத்தியர் அங்கு இடம்பெற்ற பல்வேறு முறை கேடுகள் மற்றும் பொதுமக்களுக்கு பயன்பாடு இன்றி காணப்பட்ட சுகாதார சேவைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தும் விதத்தில் செயல்பட்டார்.

இவ்வாறான நிலையில் வியாழக்கிழமை காலை கடமை நேரத்தில் வைத்தியசாலைக்கு செல்லாத வைத்திய அதிகாரிகள் சங்க வைத்தியர்கள் தனது அனுமதி இன்றி சாவகச்சேரி வைத்தியசாலைக்குள் நுழைந்து கூட்டம் நடாத்துவதாக தகவல் கிடைத்தது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய முற்பட்டபோது வைத்திய அத்தியட்சகரின் தொலைபேசி பறிக்கப்பட்டு அவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகரின் தன்னிலை விளக்கமும் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பிலும் வெடியோபதிவுகள் முகநூலில் பதிவேற்றப்பட்டது.

குறித்த பதிவில் மகப்பேறு விடுதி திடீர் விபத்து பிரிவு ஆகியவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு பணிப்புரைகளை விடுத்ததன் எதிரொலியாக முன்னாள் வட மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தூண்டுதலின் பேரில் தனக்கு எதிராக வைத்திய அதிகாரிகள் சங்கத்தை களம் இறக்கி தன்னை குறித்த வைத்தியசாலையில் இருந்து அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த வைத்திய சாலையின் வளங்கள் மக்களுக்கு பயன்படுத்தப்படாத நிலையில் திட்டமிட்ட முறையில் இருட்டடிப்புச் செய்யப்படுவதாகவும் மகப்பேற்று விடுதியக்கூட இயங்க விடாமல் வைத்திய குழு ஒன்று தடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தனியார் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் சிலர் சேர்ந்து குறித்த வைத்தியசாலையின் சிலைகளை மழுங்கடிக்கும் முயற்சியில் கடந்த காலங்களில் செயல்பட்டதாகவும் தான் இந்த வைத்தியசாலைக்கு வருகை தந்ததும் இவ்வாறான விடயங்களுக்கு இடம் கொடுக்க மாட்டேன் என தெரிந்த நிலையில் இவ்வாறான சம்பவங்கள் அரங்கேற்றப்படுகிறது.

தன் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிசார் நடவடிக்கை எடுக்கத் தயங்குவதாக பாதிக்கப்பட்ட வைத்தியர் குற்றம் சாட்டினர்.

# ரொறன்ரோ பல்கலைக்கழகம் தர வரிசையில. கனடாவில் முதலிடத்திலும், வட அமெரிக்காவின் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது இடத்திலும், இடம் பெற்றுள்ளது.

கனடாவில் எமது தமிழ் பேசும் மாணவ மாணவிகள் அதிகளவில் கற்றுவரும். ரொறன்ரோ பல்கலைக்கழகம் தர வரிசையில. கனடாவில் முதலிடத்திலும், வட அமெரிக்காவில் உள்ள பொதுப் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது இடத்திலும், சமீபத்திய உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் உலகளவில் முதல் 25 பலைகலைக் கழகங்களிலும் இடம் பெற்றுள்ளது.

மிகவும் மதிக்கப்படும் வருடாந்திர தரவரிசையில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் உலகின் முன்னணி பொதுப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு, வட அமெரிக்காவில் உள்ள பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்திற்குப் பின்னால் உள்ளது.

U.K. பகுப்பாய்வு நிறுவனமான Quacquarelli Symonds இன் மிகப் பெரிய தரவரிசை, ஜூன் 4 அன்று வெளியிடப்பட்டது மற்றும் கனடாவில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் முதல் இடத்தையும் 1,500 க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் 25 வது இடத்தையும் பிடித்தது.

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் செயல்திறன் கல்வி நற்பெயர், உலகெங்கும் உள்ள வேலை வழங்குபவர்களின் நற்பெயர், வேலைவாய்ப்பு முடிவுகள், சர்வதேச அணுகல் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றிற்கான மதிப்பெண்களால் மதிப்பளிக்கப்படுத்தப்பட்டது.

"ரொறன்ரோ பல்கலைக்கழகம் உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்குகிறது, முக்கியமான புதிய ஆராய்ச்சிகளை உருவாக்குகிறது மற்றும் எங்கள் பட்டதாரிகளை கிட்டத்தட்ட ஒவ்வொரு துறையிலும் தலைமைத்துவத்திற்கு தயார்படுத்துகிறது என்பதை இந்த தரவரிசை மீண்டும் உறுதிப்படுத்துகிறது" என்று ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் தலைவர் மெரிக் கெர்ட்லர் கூறினார்.

உலகளாவிய தரவரிசையின் 21வது பதிப்பிற்கு QS பரந்த அளவிலான பள்ளிகளை மாதிரியாகக் கொண்டு, 106 கல்வி முறைகளில் 1,500 பல்கலைக்கழகங்களின் வெளியிடப்பட்ட பட்டியலைத் தீர்மானிக்க மதிப்பீடு செய்த நிறுவனங்களின் எண்ணிக்கையை கிட்டத்தட்ட இரட்டிப்பாக்கியது.

மேல் மட்டத்தில் ஆசியா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் தொடர்ந்து ஏறி வருவதால், இந்த ஆண்டு தரவரிசையும் உயர்மட்டத்தில் ஒரு மறுசீரமைப்பைக் கண்டது. பல உயர்ந்த நிலையில் உள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் இரட்டை இலக்க வீழ்ச்சியை சந்தித்தன, அதே நேரத்தில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஆனது கடந்த ஆண்டை விட நான்கு இடங்கள் குறைந்துள்ளது.

தரவரிசையில் ஒரு பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த மதிப்பெண்ணைக் கணக்கிட ஒன்பது எடையுள்ள குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. சர்வதேச அறிஞர்களின் கணக்கெடுப்பின் அடிப்படையில், கல்வி நற்பெயர் 30 சதவீதத்தில் அதிக எடையைக் கொண்டுள்ளது. அந்த முன்னணியில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் உலகளவில் 11வது இடத்தைப் பிடித்தது.


உலகெங்கிலும் உள்ள வேலை வழங்குபவர்களின் கணக்கெடுப்பின் அடிப்படையில் 15 சதவீத மதிப்பெண்ணைப் பெற்ற ரொறன்ரோ பல்கலைக்கழகம் உலகத்தின் மொத்த வேலை வழங்குபவர்களின் நற்பெயருக்கான சிறந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.

இந்த தரப்படுத்தலுக்கு ஏற்றதாக கருதப்படும் மற்ற குறிகாட்டிகள் பின்வருமாறு: ஆசிரிய-மாணவர் விகிதம்; ஒரு ஆசிரியருக்கு மேற்கோள்கள்; சர்வதேச ஆசிரியர்; சர்வதேச மாணவர்கள்; சர்வதேச ஆராய்ச்சித் திட்டங்கள்; வேலைவாய்ப்பு முடிவுகள்; மற்றும் நிலைத்தன்மை, இதில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் முதலிடத்தைப் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்க, Massachusetts Institute of Technology, Imperial College London மற்றும் **Oxford** பல்கலைக்கழகம் தரவரிசையில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தன.

ரொறன்ரோ பல்கலைக் கழகத்தோடு, மற்ற மூன்று கனேடியப் பல்கலைக்கழகங்கள் முதல் 100 இடங்களில் அடங்கும் இடங்களைப் பிடித்தன: மெக்கில் பல்கலைக்கழகம் (29வது), பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் (38வது) மற்றும் அல்பர்ட்டா பல்கலைக்கழகம் (96வது). என இந்த வரிசை அடங்குகின்றது.

ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஆனது. கனடாவில் முதலிடத்திலும், உலகளவில் முதல் 25 பல்கலைக்கழகங்களில் மிக நெருக்கமாகப் பார்க்கப்பட்ட ஐந்து சர்வதேச தரவரிசைகளிலும்
இடம் பெற்றுள்ளது: வேர்ல்ட் யுனிவர்சிட்டி தரவரிசை, யு.எஸ். நியூஸ் & வேர்ல்ட் ரிப்போர்ட்டின் சிறந்த உலகளாவிய பல்கலைக்கழகங்கள், டைம்ஸ் உயர் கல்வியின் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை, ஷாங்காய் தரவரிசை ஆலோசனையின் கல்வித் தரவரிசை உலக பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய தைவான் பல்கலைக்கழகம் உலக பல்கலைக்கழக தரவரிசையில் சிறப்பான இடங்களைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள கனடா உதயன் ஆசிரிய பீடம் அவரிடத்தில் சில வேண்டுகோள்களையும் விடுத்துள்ளது

**கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவராக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள குமார் இரத்தினம் அவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள கனடா உதயன் ஆசிரிய பீடம் அவரிடத்தில் சில வேண்டுகோள்களையும் விடுத்துள்ளது மேற்படி கடிதத்தில் கனடா உதயன் ஆசிரிய பீடம் பின்வருமாறு வேண்டுகோள்களையும் விடுத்துள்ளது**

---------------------------------------------

திரு குமார் இரத்தினம்
தலைவர்
கனடிய தமிழர் பேரவை

கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவராக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றமைக்கான எமது வாழ்த்துக்கள்

கனடாவில் வாழும் தமிழ் மக்களின் நலன்களைக் கவனிக்கும் ஒரு அமைப்பாகவும்,அதற்கு மேலாக தாயகத்தில் உள்ள எமது உறவுகளின் அரசியல் சமூக மற்றும் கல்வி ஆகியவை சார்ந்த விடயங்களில் ஒரு ஆதரவுச் சக்தியாகவும் இயங்கும் வகையில் நிறுவப்பெற்ற கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவராக ஒரு காலத்தின் தேவையாக தங்கள் நியமனம் இடம்பெற்றிருக்கலாம் என்பதை நாம் உணர்கின்றோம்..

எவ்வாறாயினும் தங்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டிய கடமை எமது கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு உண்டு. அதற்கு காரணம், எமது பத்திரிகையானது கடந்த பல வருடங்களாக கனடிய தமிழர் பேரவைக்கான பரப்புரைகள் மற்றும் விளம்பரங்கள் ஆகியவற்றை பிரசுரம் செய்து ஆதரவுக் கரம் நீட்டியுள்ளது..அவ்வப்போது தங்கள் அமைப்பு நடத்திய நூற்றுக்கணக்கான பொது நிகழ்வுகளிலும் எமது ஆசிரிய பீடத்தின் பிரசன்னம் இருந்துள்ளது.

இவ்வாறிருக்க, கடந்த காலங்களில் கனடியப் பேரவையின் தலைமையும் அதன் நிர்வாகப் பணியாளர்களும் இணைந்து மேற்கொண்ட பல விரும்பத்தகாக செயற்பாடுகள் தொடர்பாக பல செய்திகளையும் ஆசிரிய தலையங்களையும் தீட்டி எமது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த எமது ஆசிரிய பீடம் தீவிரமான முயற்சிகளையும் எடுத்தது.

இவ்வாறாக, நீண்ட காலமாக கனடியத் தமிழர்களின் பொதுக் கருத்துக்களுக்கும் அவர்களின் விருப்புகளுக்கும் மாறான கனடிய தமிழர் பேரவையின் தீர்மானங்களும் செயற்பாடுகளும் தங்கள் அமைப்பிற்கு எதிரான ஒரு எழுச்சியை கனடாவில் மாத்திரமல்ல, தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் ஏற்படுத்தின என்பதையும் தாங்கள் அறிவீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்.

எனவே தங்கள் பதவிக் காலத்தில் தாங்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு. பின்வரும் வேண்டுகோள்களை எமது ஆசிரிய பீடம் தங்கள் பார்வைக்காக சமர்ப்பிக்கின்றது.

1. கனடிய தமிழர் பேரவையின் தற்போதைய இயக்குனர் சபையல்லாத நிர்வாகப் பணியாளர்களை இடைநிறுத்தம் செய்து புதியவர்களை தகுந்த நேர்முகப் பரீட்சைகளின் மூலம் தெரிவு செய்து பதவிகளில் இணைத்துக் கொள்ளல்

2. கடந்த பத்து ஆண்டுகளுக்கான கனடிய தமிழர் பேரவையின் கணக்கறிக்கை கனடிய தமிழ் மக்களின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்படுதல். (இந்த வேண்டுகோளை தாங்கள் ஏற்றுக்கொண்டால் அந்த அறிக்கையை எமது பத்திரிகை இலவசமாக பிரசுரம் செய்யும்)

மேற்படி இரண்டு வேண்டுகோள்களையும் எமது ஆசிரிய பீடத்தின் சார்பாகவும் கனடிய தமிழர் சமூகத்தின் சார்பாகவும் தங்களிடம் சமர்பித்து, தங்கள் மேலான நடவடிக்கைகளுக்காகவும் பதிலுக்காகவும்
காத்திருக்கின்றோம்.

நன்றி
இங்ஙனம்
கனடா உதயன்- ஆசிரிய பீடம் - 04-07-2024


Canada's No.1 Tamil Newspaper
Logan N. Logendralingam
Editor in Chief

Uthayan Publishers
4062 Ellesmere Road
Toronto, ON M1C 1J2
Tel: 416-752-1524

UTHAYAN PUBLISHERS
4062 Ellesmere Road, Scarborough, ON M1C 1J2 Tel: 416.752.1524 Fax: 416.752.6783

# Global Powers That Backed Sri Lanka's War Questioned Over Tamil Disappeared

- Siva Parameswaran

War-affected Tamil families have expressed their deep anguish against the international community and accused them of not acting to ensure justice.

Tamil mothers, sisters, and wives handed over thousands of Tamils young and old to the Sri Lankan state security forces at the end of the war. They either surrendered or were handed over by the families or forcefully taken away by the armed forces only to be never seen again.

Even after 15 years since the brutal civil war came to a bloody end, the state has not even found one single person handed over to them by the grieving mothers.

Now, the Tamil women who have been leading a peaceful protest for over 8 years say, the international community has not contributed in a meaningful way in their fight and quest for justice for those who are still missing.

The women-led peaceful struggle in search of their kith and kin is considered to be the longest such protest globally in recent times.

In a unified voice, the Tamil women from the eight districts staging eight protests throughout the past week in the North and East of Sri Lanka demanding justice for their disappeared ones and seeking accountability said they look forward to the international community alone.

"We the Tamil mothers fighting for justice, don't expect any such thing from the Sri Lankan government," said Kokilavani Kathirgamanathan who led the protest from the forecourt of the Kanthaswamy temple in Killinochchi.

She is also the leader of the Association for the Relatives of the Enforced Disappearances (ARED) in the district. The ARED is a grassroots activist group created to search for the tens of thousands of people who disappeared during Sri Lanka's armed conflict.






"Our fight will continue till we get back our relatives. The struggle will continue till we are alive. We are not asking for any compensation or our relatives from the Sri Lankan government. We seek the return of our relatives from the international community. Only the international community could get justice for our missing relatives".

In a similar protest held on the 26th of June in the war-torn Mullaitivu district, the leader of the ARED in that district Mariasuresh Eswary said they seek justice from the international community who helped the Sri Lankan state to launch a massacre.

'International Community aware'

"What happened to our relatives? Where are our relatives? Are they alive or not? What did they do to our relatives after taking them from us? They should be punished and justice must be rendered to us. Only the international community helped the state to destroy us. So, we are demanding justice from them. Only they know where they are being kept".

The grieving mothers, sisters, and wives are unrelenting and have vowed to carry on their




peaceful protest and fight till they see their relatives return to them, if not know the truth as to what happened to them and who was behind any heinous acts. They demand accountability to be ensured and proper answers and actions to follow.

Yogarasa Kanakaranjani heads the ARED combine in the North and East. Only an international mechanism can deliver justice she said at the end of the 2687th day of their ongoing protest in Killinochi on the 30th of June.

"We are seeking justice for us from the international community. The Sri Lankan government has not rendered justice for us nor will they do it. Hence, those who feel human rights are dear to them should get justice for us. We are fighting amidst intelligence sleuths. The diaspora without falling prey for money should stand united and get the due justice for us".

Manuel Uthayachandra is the chair of the ARED in Mannar district. She accuses the Sri Lankan government of not letting know them the fate of their children. She said so while leading a protest in that district on the 28th of June adding the government is resorting to appointing a new commission every year.

"The government has formed 14 commissions in 14 years. The commission came to Mannar also under the guise of Truth and Reconciliation. We don't know if truth exists in our country. Similarly, we don't know if reconciliation exists at all. Such agony should not have occurred to the Tamil race. We are only asking for the children handed over to you, those children who surrendered as families and those who were abducted in white vans, and not those children who are dead".

A similar question was raised by Sivapatham Elankothai, President of the ARED in Jaffna. She questioned if the Tamil mothers longing to see their children handed over to the armed forces would die without seeing them. She was in tears during the protest on the first of July.

"On May 18th all our children surrendered. Families by families they surrendered. Those who survived the constant cluster bombing surrendered. Over 100 children and parents surrendered with Father Francis. They were told they would be released after inquiries. People were also made to surrender at Vattuvakkal. The Army told them they would be released after inquiries. It's 15 years now. We are afraid we would be dead before rescuing our children".

Local journalists say ARED staged protests on June 27th at Amparai and in Trincomalee and Vavuniya on the 30th of June.

OMP Pressure

Protests seeking answers about their missing relatives also continued in the eastern part of Sri Lanka as well. Amalanayaki Amalraj led one such protest by the ARED on the 24th of June in front of Gandhi Park in Batticaloa.

Those participating in the continuing protests by the ARED point out the Office for the Missing Persons (OMP) formed through an act of Parliament in February 2018 when the current President Ranil Wickremesinghe was the Prime Minister, has not even found a single Tamil who had gone missing since the end of the war 15 years back.

The OMP also came in for strong criticism during the protests. Amalanayaki was furious over the duplicity of the OMP and its functioning.

"The Sri Lankan government brought in the OMP with a view to dubiously close the files about the missing persons by offering compensation through that office and misleading the people. We did not register at the OMP. They obtained the details from elsewhere and say they had obtained our documents and called upon us to come and register immediately. They also said only if we register with them we would get any benefits thereby misleading the already traumatized innocent mothers forcing them to receive death certificates saying only if they did so, they would receive benefits. Sri Lankan government is dragging the time by forming a deceitful OMP or an internal mechanism regarding accountability".

The physically and financially weak but emotionally strong Tamil mothers who have relentlessly carried on their struggle for over 8 years feel they may die without knowing the fate of their children, despite continuing their agitation in the scorching sun and pouring rains. But mothers' like Amalanayaki Amalaraja are confident the youngsters will take forward the struggle seeking justice for those who have gone missing.

"We have lost more than 200 mothers who were searching for their relatives. The evidences are being destroyed. We exist as the physical witnesses who saw the happenings. The reason for dragging the issue is to see that we are dead and gone. The Sri Lankan government and those working with it think there won't be anyone who would raise their voice for the missing ones, once we are dead and gone. But the young generation would take it forward."

## விஞ்ஞான மேதை ஸ்ரீபன் ஹக்கிங் (நிலைமண்டில ஆசிரியப்பா)

அண்ட வெளியில் அடங்கிய அற்புதம்
கண்ட விஞ்ஞானி கலாநிதி ஸ்ரீபன்
விண்ணை அடைந்து விட்டார் விரைந்தே!
மண்ணில் மீண்டும் தோன்றுவார் விரைவில்
அறிவின் உச்சம் அலையின் ஓசை
அறிவியல் தந்த அற்புத ஆசான்
இத்தனை அற்புதம் எப்படித் தந்தார்
அத்தனை அறிவியல் அறிஞர் பெருமான்
தத்துவ முத்தைத் தரமாய்த் தந்தே!
வித்தனாய் விளங்கி விண்ணுல கேகினார்
உயர்ந்த இலக்கிற்கு உடல்நிலை மறுத்தும்
இயங்கா உடலால் இயங்கும் உலகிற்கு
இயக்கச் சூத்திரம் இனிதே கண்டார்
தயக்கம் இன்றியே தரணியில் உழைத்தார்
சக்கர இருக்கையில் தவழ்ந்த போதுமே!
மிக்கார் இலையென வாழ்ந்து காட்டினார்
முனைவர் என்ற மதிப்பான பட்டத்தை
அனைவரும் போற்றும் அரங்கிலே பெற்றார்
ஊனமாய் உடலும் உருவமும் குலைந்தும்
ஏனென்றும் எதற்கென்றும் கேள்விகள் கேட்டார்
மானிடமும் மண்ணும் மலர்ச்சி பெற்றிட
வானத்து விளைவை விபரமாய்த் தந்தார்
இறக்கும் வரைக்கும் ஏகாந்த மூச்சொடு
சிறப்பான பாடமாய்த் தன்னைத் தந்தார்
இறவா நூல்கள் எழுதிக் குவித்தவரை
மறவா ஒருபோதும் மண்ணுல குள்ளவரை
எழுபத்ஆ றுவயதில் இவ்வுலகை நீத்தாலும்
அழியா அவர்பெயர் இவ்வுல கிலே!

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1102

## செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில் - மட்டக்களப்பு

உலகிலே வழங்கும் முதன்மையான சமயங்களுள் முதல் வரிசையிலே வைத்து எண்ணத்தக்கதாக சைவசமயம் காணப்படுகின்றது. சைவம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமாகும். ஆகவே சைவம் என்பது காரணப் பெயராக விளங்குகின்றது. கி.மு 5000 ஆயிரம் ஆண்டுகளுக்கு மன்னரே பாரதநாட்டில் சிவலிங்க வழிபாடு நிலைபெற்றிருந்தது. இதனை சிந்துவெளியிலே மேற்கொள்ள்பட்ட ஆராய்ச்சிகள் நன்கு புலப்படுத்தியுள்ளன.

தொன்மையான சிவ வழிபாடு உலகம் முழுவதும் பரவி இருந்துள்ளது. இதற்குச் சான்றாக மேலைநாடுகளிலும், கீழைத்தேசங்களிலும் ஆங்காங்கே அருகிக் காணப்படுகின்ற சிவலிங்கத் திருவுருவங்களே சாட்சியாக உள்ளன. சைவசமயம் தோன்றிய காலம் இல்லாது அநாதியானதாகக் காணப்படுகின்றது. உலகம் படைப்பப்படும்பொழுதே இச்சமயம் தோன்றியதாக ஞானிகள் கூறிச் சென்றுள்ளனர்.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகவும், விநாயகர், முருகன், அம்மன் வடிவங்களை அவரின் அருள் மூர்த்தங்களாகவும் அவரவர் தன்மைக்கேற்ப வழிபாடு செய்து வருகின்றனர். மட்டக்களப்பிலே அசாரத்தோடு கூடிய, கட்டப்பாடற்ற வகையில் தமது இஷ்ட தெய்வத்தைப் பூசித்து, பக்தி செய்து தமக்கு வேண்டும் வாழ்வியல் நலன்களையும், ஆன்மீக நலன்களையும் பெறுகின்றனர். எத்தகைய அருள் மூர்த்தங்களை வழிபட்டாலும் அனைவருக்கும் சிவபெருமானது திருவருட்பொலிவு கிடைக்கின்றது "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றும், "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி அங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்றும் கூறப்பட்டமை மேற்கூறிய கூற்றிற்குச் சான்றாகும்.

பண்டைய மட்டக்களப்பு தமிழக சைவமக்கள் முருகக'கடவுளுக்கும், விநாயகக் கடவுளுக்கும் காட்டும் வழிபாட்டின் மூலமே சிவனை வணங்கப் பெற்றனர். இதற்கு எடுத்தக்காட்டாகக் காணப்படுபவை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலும், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோயிலுமாகும். கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலில் ஆதியில் முருக வழிபாட்டுப்படியே பூசைகள் நடைபெற்று வந்துள்ளன. பின்னர் அந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு, சிவன் கொயிலாக மாற்றம் பெற்றது.

மட்டக்களப்பு மாமாங்கேச்சரம் கொயில் சிவன்கோயிலாக இருந்தபோதிலும் விநாயகா வழிபாட்டு முறையே இங்கு பின்பற்றப்படுகின்றது. இவ்விரண்டு கொயில்களின் கருவறையிலும் சிவலிங்கமே காணப்படுவதால் இவற்றை சிவன் கொயில் என்றெ கொள்ள் வேண்டும். இவ்விரண்டு கொயில்களும் ஈச்சரம் என்றே அழைக்கப்படுகின்றன. இவ்வழக்கு சிவன்கோயில்களுக்கு மட்டுமே காணப்படும் வழக்காகும். முாமாங்கேச்சரத்தில் மூலத்தானத்திலுள்ள சுயம்பு லிங்கத்திற்கு விநாயகருடைய அங்கியை அணிவித்தே வணங்கி வருகின்றனர். இதனால் இக்கோயிலை மாமாங்கப் பிள்ளையார் கோயில் என அழைக்கின்றனர்.

இவ்வாறு மட்டக்களப்புப் பிரதேசத்திலே காணப்படும் சிவன் கோயில்கள் மாற்றம் பெற்றுள்ளன. இந்நிலையில் செட்டிபாளையம் சோமநாத இலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில் மட்டக்களப்பிலுள்ள சிவன்கோயிலாக விளங்குகின்றது.

இக்கோயில் மட்டக்களப்பிலிருந்து கல்முனைக்குச் செல்லும் பிரதானபாதையில் மட்டுநகரின் தெற்கே பன்னிரண்டு மைல் தொலைவில் செட்டிபாளையம் என்னும் அழகிய கிராமம் அமைந்துள்ளது. செட்டிமார் பாளையமிட்டுத் தங்குமிடம் என்ற கருத்தில் இவ்வூரின் பெயர் அமைந்துள்ளது. இக்கிராமம், வடக்கே குருக்கள் மடம் என்னும் கிராமத்தினையும், தெற்கே மாங்காடு என்னும் கிராமத்தினையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. நெய்தலும், மருதமும் ஒருங்கே கொண்ட கிராமமான செட்டிபாளையம் திகழ்கின்றது.

செட்டிபாளையம் மகா வித்தியாலயம் அமைந்துள்ள சந்தியிலிருந்து கிழக்கே சுமார் ஐம்பது யார் தொலைவில் சோமநாத இலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில் காணப்படுகின்றது. கடற்கரை சார்ந்த கோயிலாகக் காணப்படுவதால், கோயில் வீதியெங்கும் வெண்மணற் பரப்பாகக் காணப்படுகின்றது. கோலிலிருந்து சுமார் அரை மைல் தொலைவில் ஆர்ப்பரிக்கும் கடல் கண்ணுக்குத் தெரியும்.

இக்கோயில் கல்லாலான கோயிலாக விளங்குகின்றது. மடாலய அமைப்பிலேயே இவ்வாலயம் காட்சி தருகின்றது. கோயிலின் கருவறையில் மூலமூர்த்தியாக சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இச்சிவலிங்கத்தினை இந்தியாவிலிருந்து ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகள் தருவித்தார்.

*வளரும்...*

# "ரொறன்ரோவில் வாழுகின்ற அனைத்து தமிழ்க் குடும்பங்களையும் உள்ளடக்கிய எமது சமூகத்தின் பங்களிப்போடே. ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தை' கட்டி எழுப்ப விரும்புகின்றோம்"

கனடிய செய்திகள் Canadian News

## ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்திற்கான நிதி சேகரிப்புக் குழுவின் சார்பில் வர்த்தகப் பிரமுகர் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவிப்பு



"ஸ்காபுறோ நகரில் எமது சமூகத்திற்காக அமையவுள்ள தமிழச் சமூக மையம் பற்றி எமது கனடா வாழ் தமிழர்கள் அனைவரும் அறிந்திருப்பார்கள் என்பது எமது நம்பிக்கை. இந்த விடயத்தில், ரொறன்ரோவில் வாழுகின்ற அனைத்து தமிழ்க் குடும்பங்களையும் உள்ளடக்கிய எமது சமூகத்தின் பங்களிப்போடே. ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தை" கட்டி எழுப்ப தற்போது மிக வேகமாகவும் விவேகமாகவும் செயற்படும் அமைப்புக் குழுவினராகிய நாங்கள் விரும்புகின்றோம். எனவே இங்கு வாழும் தமிழ்க் குடும்பங்கள் அல்லது தனி நபர்கள் ஆகியோரில் சுமார் 2500 பேரிடமிருந்து நாங்கள் பத்தாயிரம் டாலர்களை பெற்றுக் கொள்வதன் மூலம் அதன் மூலம் நாம் 25 மில்லியன் டாலர்களை சேகரித்து எமது திட்டத்தை நாம் பூரணமாக கட்டி முடிக்கலாம் என்று நம்புகின்றோம்".

இவ்வாறு 03-07-2024 அன்று புதன்கிழமையன்று மார்க்கம் நகரில் அமைந்துள்ள கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பு நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிய ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்திற்கான நிதி சேகரிப்புக் குழுவின் சார்பில் வர்த்தகப் பிரமுகர் சாந்தா பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வில் தமிழ்ச் சமூக மையத்தின் தற்போதை இயக்குனர் சபையின் சார்பில் தீபிகா மற்றும் குபேஸ், ரமணன், ஜெயக்குமார். சாந்தா பஞ்சலிங்கம் உட்பட கனடிய தமிழர் தேசிய அவையின் பிரதிநிதி ஒருவரும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய அனைவரும் மேற்படி தமிழ்ச் சமூக மையத்திற்கான கட்டிட நிதியாக கனடாவின் மத்திய மாகாண மற்றும்ரொறன்ரோ உள்ளாட்சி அரசுகளின் சார்பில் கிடைத்துள்ள 23 மில்லியன் டாலர் நிதி உதவியானது எமது தமிழ்ச் சமூகத்திற்கு கிடைத்த ஒரு பெரும் கொடை என்றும் அதற்கு மேலாக இந்த திட்டத்தை பூர்த்தி செய்ய தேவையான முழுமையான நிதியையும் வர்த்தக சமூகம் உள்ளடங்கிய எமது தமிழ்ச் சமூகத்திற் பங்களிப்பை நம்பியிருப்பதாகவும், அமையவுள்ள தமிழச் சமூக மையத்திற்கு எமது சமூகத்தின் முழுமையான பங்களிப்பு இருக்க வேண்டும் என்பதை நிதி சேகரிப்புக் குழு நன்கு உணர்ந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் தனதும் ஏனைய இயக்குனர் சபை உறுப்பினர்கள் சார்பிலும் தனது கருத்துக்களை தெரிவித்தார்."

"எமது சமூகத்தில் உள்ள வர்த்தக பிரமுகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோர் தங்கள் பங்களிப்புக்களை பெருமளவில் வழங்க உறுதியளித்துள்ளனர். ஆனால் அது மட்டுமன்றி, சுமார் 2500 தமிழ் பேசும் குடும்பங்களின் பங்களிப்புடன் கனடிய தமிழ்ச் சமூகத்தின் சார்பில் நாம் திரட்ட வேண்டிய 25 மில்லியன் டாலர்களை எமது இயக்குனர் சபையும் நிதி சேகரிப்புக் குழுவும் சேகரிக்க இங்குள்ள தமிழ் மொழி சார்ந்த ஊடகங்களையும் பத்திரிகைகளை வெளியிடும் நிறுவனங்களையும் வேண்டுகின்றோம்" என்று தெரிவித்தார்.





# யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா நடத்திய 22வது வருட நிதிசேர் நடை




கடந்த ஜூன் 29, 2024 சனிக்கிழமை அன்று யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடத்திய 22வது வருட நிதிசேர் நடை (Walk-A-Thon) சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

மேற்படி நடை பயணத்தை ''Heart & Stroke Foundation"க்காக Morningside Park இல் நடத்தி அதுவரை சேகரித்த $11,270.00 பணத்தை அந்த அமைப்பினருக்கு வழங்கியிருந்தார்கள். இந்த நற்காரியத்திற்கு தங்கள் நிதியை வழங்கிய அனைவருக்கும் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நன்றியைத் தெரிவிக்கின்றது.

கடந்த 22 வருடங்களாக சேகரிக்கப்பட்ட நிதியில் $50,000 க்கும் மேற்பட்ட தொகையினை Hospital for Sick Children அமைப்புக்கும், ஏறத்தாழ $30,000 தொகையினை Heart & Stroke Foundation அமைப்புக்கும் வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தையிட்டு யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா உவகை கொள்கிறது.

இந்த நல் நோக்கத்துக்கு இத்தனை ஆண்டுகளாக தொடர்ந்து நிதி ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் அனைத்து நல்லிதயங்களுக்கும், நிதி சேகரிப்பில் முழு அளவில் ஈடுபட்டு நிர்ணயித்த தொகைக்கும் மேலாக பெற்றுத் தந்த தொண்டர்களுக்கும் சங்கத்தின் சார்பாக எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.






# அன்பின் தொனி - 782

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**தேவகிருபை** - Grace of God

**ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும்**

இவை எல்லாவற்றையும் என் மாயையின் நாட்களில் கண்டேன்; தன் நீதியிலே கெட்டுப்போ கிற நீதிமானுமுண்டு, தன் பாவத்திலே நீடித்திருக்கிற பாவியுமுண்டு. மிஞ்சின நீதிமானா யிராதே, உன்னை அதிக ஞானியுமாக்காதே; உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ளவேண்டும்? மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையுமாயிராதே; உன் காலத்துக்குமுன்னே நீ ஏன் சாக வேண்டும்? நீ இதைப் பற்றிக்கொள்வதும் அதைக் கைவிடாதிருப்பதும் நலம்; தேவனுக்குப் பயப்படுகிறவன் இவைகளெல்லாவற்றினின்றும் காக்கப்படுவான். நகரத்திலுள்ள பத்து அதி பதிகளைப்பார்க்கிலும், ஞானம் ஞானியை அதிக பெலவானாக்கும். ஒரு பாவமும் செய்யா மல், நன்மையையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை. சொல்லப்படும் எல்லா வார்த்தை களையும் கவனியாதே; கவனித்தால் உன் வேலைக்காரன் உன்னை நிந்திப்பதைக் கேள்விப் படவேண்டியதாகும். அநேகந்தரம் நீயும் பிறரை நிந்தித்தாயென்று, உன் மனதுக்கு தெரியுமே. இவை எல்லாவற்றையும் ஞானத்தினால் சோதித்துப்பார்த்தேன். நான் ஞானவானாவேன் என்றேன், அது எனக்குத் தூரமாயிற்று. தூரமும் மகா ஆழமுமாயிருக்கிறதைக் கண்டடைகி றவன் யார்? ஞானத்தையும் காரணகாரியத்தையும் விசாரித்து ஆராய்ந்து அறியவும், மதி கேட்டின் ஆகாமியத்தையும் புத்திமயக்கத்தின் பைத்தியத்தையும் அறியவும் என் மனதை செலுத்தினேன். கண்ணிகளும் வலைகளுமாகிய நெஞ்சமும், கயிறுகளுமாகிய கைகளுடைய ஸ்திரீயானவள், சாவிலும் அதிக கசப்புள்ளவளென்று கண்டேன், தேவனுக்குமுன்பாகச் சற்குணனாயிருக்கிறவன் அவளுக்குத் தப்புவான்; பாவியோ அவளால் பிடிபடுவான். காரியத்தை அறியும்படி ஒவ்வொன்றாய் விசாரணைபண்ணி, இதோ, இதைக் கண்டுபிடித்தேன் என்று பிர சங்கி சொல்லுகிறான். என் மனம் இன்னும் ஒன்றைத் தேடுகிறது, அதை நான் கண்டுபிடிக்கவி ல்லை ஆயிரம்பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன், இவர்களெல்லாருக்குள்ளும் ஒரு ஸ்திரீயை நான் காணவில்லை. இதோ தேவன் மனு'னைச் செம்மையானவனாய் உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்.

**- பிரசங்கி 7: 15-29**

**துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கவுமாட்டாது**

ஞானமுள்ளவனுக்கு ஒப்பானவன் யார்? காரியத்தின் தாற்பரியத்தை அறிந்தவன் யார்? மனுஷனுடைய ஞானம் அவன் முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அவன் முகத்தின் மூர்க்கம் மாறும். ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நட என்று நான் உனக்கு எச்சரிக்கிறேன், நீ தேவனுக்கு இட்ட ஆணையின்படியே இதைச் செய். நீ அவன் சமுகத்தை விட்டுவிலகத் துரிதப் படாதே, பொல்லாதகாரியத்திலே பிடிவாதமாய் நில்லாதே; அவன் தனக்கு இஷ்டமானதெல் லாம் செய்வான். ராஜாவின் வார்த்தை எங்கேயோ அங்கே அதிகாரம் உண்டு; நீர் என்ன செய் கிறீர் என்று அவனுக்குச் சொல்லத்தக்கவன் யார்? கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங்கையும் அறியான்; ஞானியின் இருதயம் காலத்தையும் நியாயத்தையும் அறியும். எல்லாக் காரியத்துக்கும் காலமும் நியாயமும் உண்டு; ஆதலால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி. இன்னது சம்பவிக்கும் என்று அவன் அறியானே; அது இன்னவிதமாய்ச் சம்பவிக்கும் என்று அவனுக்குச் சொல்லத்தக்கவன் யார்? ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை; மரணநாளின்மேலும் அவனுக்கு அதிகாரமில்லை; அந்தப் போருக்கு நீங்கிப்போவதுமில்லை; துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கவுமாட்டாது. இவை யெல்லாவற்றையும் நான் பார்த்து, சூரியனுக்குக் கீழே செய்யப்படும் எல்லாக் கிரியை களையும் சிந்தித்தேன், ஒரு மனு'ன் தனக்கே கேடுண்டாக வேறொரு மனுஷனை ஆளுகிற காலமுமுண்டு. பரிசுத்த ஸ்தலத்துக்குப் போக்குவரவு செய்த துன்மார்க்கர் அடக்கம்பண்ணப் பட்டதைக் கண்டேன். அவர்கள் அப்படிச் செய்து வந்த பட்டணத்திலேயே மறக்கப்பட்டுப்போனார்கள்; இதுவும் மாயையே. **- பிரசங்கி 8: 1-10**

*தொடரும்...*

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# முன்னாள் போராளிகள் தமது பிரதேசங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான தகமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்

## ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி



**- எஸ்.ஆர். லெம்பேட் (30-06-2024)**

மன்னார் மாவட்டத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் நிர்வாக கட்டமைப்பு எதிர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு அரசியல் ரீதியாக எமது கட்சியின் செயல் பாடுகளை விரிவு படுத்தி செயல்பட உள்ளோம் என ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி தெரிவித்தார்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டமும்,சமகால அரசியல் கருத்தமர்வு 30-06-2024 ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் எஸ். வேந்தன் மற்றும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் நிர்வாக கட்டமைப்பு எதிர் காலத்தில் ஏற்படுத்தப்பட்டு, அரசியல் ரீதியாக எமது கட்சியின் செயல் பாடுகளை விரிவு படுத்தி செயல்பட உள்ளோம்.

இக்கூட்டத்தின் போது முன்னாள் போராளிகளின் அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள போதும் முன்னாள் போராளிகள் சமகால அரசியல் களத்தில் ஒரு ஜனநாயக வெற்றியை பெற்றுக் கொள்ள முடியாத நிலை தொடர்பாக அவர்களினால் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டது.

அதனடிப்படையில் எதிர்வரும் காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் வெளியேறிய போராளிகள் அரசியல் ரீதியாக எதிர் வரும் காலத்திலே ஒன்றிணைந்து ஒரு வெற்றிக்காக அனைவரும் செயல் பட வேண்டும்.

எமது முன்னால் போராளிகள் தமது பிரதேசங்களில் எதிர் வரும் காலங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கான தகமைகள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசியல் மாத்திரம் இல்லாது சமூக கட்டமைப்புடனும் அதிக ஆர்வத்துடன் செயல்பட வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் தொடர்பில் ஜனநாயக போராளிகள் கட்சி ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சியுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

குறித்த கட்சியின் அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து கலந்துரையாடி பொது வேட்பாளர் தொடர்பில் ஒரு ஒற்றுமையான முடிவை மேற்கொள்ளுவோம்.

எதிர்வரும் காலங்களில் பொது அமைப்புக்களுடன் இணைந்தும் பொது வேட்பாளர் குறித்து கலந்துரையாடி வெகு விரைவில் முடிவுக்கு வருவோம். என அவர் மேலும் தெரிவித்தார்.



# மீண்டும், எல்லை தாண்டி மீன் பிடித்த நான்கு படகுகளுடன் 25 தமிழக மீனவர்களை கைது செய்தது இலங்கை கடற்படை: அவர்களை விடுதலை செய்ய கோரி கடலில் இறங்கி போராட்டம்

## ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து ஸ்தம்பிதம்



**- எஸ்.ஆர். லெம்பேட்**

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 4 நாட்டு படகுகளையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் இலங்கை கடற்படை கைதுசெய்துள்ளமை யை கண்டித்து பாம்பன் மீனவர்கள் 01-07-2024 திங்கட்கிழமை காலை கடலில் இறங்கி போராட்டம் நடத்தினர்.

மேலும், மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய கோரி பாம்பன் சாலை பாலத்தில் மீனவர்கள் நடத்திய சாலை மறியல் போராட்டத்தில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

பாம்பன் வடக்கு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 50க்கும் மேற்பட்ட நாட்டு பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர்.

நாட்டுப் படகு மீனவர்கள் 01-07-2024 திங்கட்கிழமை அதிகாலை இலங்கை நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த இலங்கை கடற்படையினர் 4 நாட்டு படகுகளையும் அதிலிருந்து இருதயராஜ், கிரேசியான், லயோனஸ் உள்ளிட்ட 25 மீனவர்களையும் கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

முதற்கட்ட விசாரணைக்கு பின்னர் மீனவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க உள்ளனர்.

இந்நிலையில் பாம்பன் பகுதி நாட்டுப்படகு மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தமை யை கண்டித்து மீனவர்களின் உறவினர்கள் மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் மீனவர்கள் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி பாம்பன் சாலை பாலத்தின் முகப்பு பகுதியில் அமர்ந்து சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

மீனவர்களின் இந்த சாலை மறியலால் மதுரை தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் நீண்ட நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மீனவர்கள் தங்களது போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ள நிலையில் மீனவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் மீனவர்கள் போராட்டம் தொடரும் என தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என மீனவரின் உறவினர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளனர்.





# இவ்வார ராசிபலன்

## 05-07-2024 வெள்ளி தொடக்கம் 11-07-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** உடல்நலத்தில் ஷேமம் கிடைக்கும் வாரம். ஆலய தரிசனம் அமைதியை தரும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய், நொடிகள் அகலும். பெயர், புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். விரும்பியது நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். நட்பு வட்டம் விரிவடையும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள், ஆன்மீக வாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பழைய கடன் அடையும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். பொறுப்புக்கள் சிறப்பு சேரும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: *4,3,9,1*
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**ரிஷபம்:** கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும் வாரம். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல் நலம் சிறக்கும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். திருமண பாக்கியம் கூடி வரும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை காணப்படும். செல்வாக்கு உயரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். நவகிரஹ அனுகிரஹம் நன்மை அளிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும். குதூகலம் கூடும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன் கச்சைகள் தீரும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். தேவைகள் பூர்த்தியாகும். தேக பலம் கூடும். தொழில் போட்டி மறையும். புதிய முயற்சிகள் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: *9,7,5,1*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**மிதுனம்:** மதிநுட்பத்தோடு செயல்படும் வாரம். வியாபாரம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். வம்பு, தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் கைகூடி வரும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து அலைமோதும். புதிய வாய்ப்புக்கள் பயன் தரும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: *6,9,4,3*
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். பயண முயற்சி பலன் தரும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். ஆபத்துக்கள் விலகும். அதிகாரம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதாரம் மேம்படும். தோதான வாழ்வமையும். இல்லம் தேடி வாய்ப்புகள் வரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் மாற்றம் ஏற்படும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு இனிக்கும். ஏற்றமான தருணம் அமையும். தொழில் அபிவிருத்தி உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் வரும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் புரளும். திடீர் பயணம் உற்சாகம் தரும். கர்ம வினைகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பவானி அம்மன், அதிர்ஷ்ட எண்: *3,9,5,4*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,T




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** அதிகார பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஆரோக்யம் சீராகும். தன வரவுகள் பெருகும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவிற்கு வரும். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் அதிகரிக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தொழில் இடமாற்றம் நன்மை தரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றம் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: யானை பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கன்னி:** வரவுகள் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன யோகம் உண்டு. வெற்றியை எட்டும் காலம். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெண்களின் ஆலோசனை ஆதாயம் தரும். இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். குடும்பத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய கடன் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் பணிவு தேவை. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேன்மைகள் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மன நிம்மதி அதிகரிக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் பழி அகலும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: *4,9,6,2*
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,L




**துலாம்:** சாதகமான சூழ்நிலைகள் அமையும் வாரம். தொட்டது துலங்கும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ண மயமாகும். உறவினரால் உதவி கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். பணியாட்களின் ஆதரவு பெருகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். தொழிலின் ரகசியம் காப்பாற்றப்படுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டு. தேக ஆரோக்கியம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவில் கவனம் தேவை. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். கலவரமான சூழ்நிலை காணப்படும். போட்டி, பொறாமைகள் விலகும். பாகப்பிரிவினை ஏற்படும். மனை வாங்கும் யோகம் உண்டு. மன நெருக்கடிகள் தீரும். ஊக்கம் அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மருத காளியம்மன், அதிர்ஷ்ட எண்: *1,6,4,9*
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,K




**விருச்சிகம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். பயணம் லாபம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேசப் பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புண்ணியம் சேரும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். வீண் பிரச்சனைகள் அகலும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் பூர்த்தியாகும். வாயில் தேடி வரன் வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவுகள் திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். தாய் வழி தகராறுகள் குறையும். குடும்ப கௌரவம் உயரும். காதல் கைகூடும். கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். விரக்திகள் மறையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். விரோதங்கள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: *6,3,9,1*
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P (தொடர்ச்சி 26 பக்கம்)

# மரண அறிவித்தல்

தோற்றம்:

18 - 11 - 1941

மறைவு:

03 - 07 - 2024







## திரு. பேரம்பலம் கந்தசாமி

(JP - சமாதான நீதவான், முன்னாள் கிராமோதய சபைத் தலைவர், நேனரமெநசநெல Wine Store Owner)

**வவுனியா நெடுங்கேணி பகுதி ஊஞ்சால்கட்டியைப் பிறப்பிடமாகவும், வவுனியா சாஸ்திரி கூளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கந்தசாமி அவர்கள் 03-07-2024 புதன்கிழமை அன்று காலமானார்.**

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம், பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவனடியார், பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,

றதிதேவி அவர்களின் ஆருயிர்க் கணவரும்,

சுகிதா (கனடா), செந்தூரன் (கனடா), செந்திலன், காலஞ்சென்ற மயூரன் மற்றும் அமிர்தினி( துர்கா - கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

ஜெயசீலன் (கனடா), டினோஜா (கனடா), கலைவாணி, அமுதன் (செலான் வங்கி கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

கார்த்திகேயன், நிலவன், கனிஸ்கா, அனுஜ், நிலக்ஸன், டன்னியஶ்ரீ ஆகியோரின் அன்புப் பேரனும்,

காலஞ்சென்றவர்களான கனகம்மா, கனகையா, நல்லம்மா மற்றும் தவமணி, சிங்கராஜா (ராஜா), சோமசுந்தரம் (விக்கினம்), அமிர்தலிங்கம் (ஐயா), சிவனந்தராஜ் (கே.பி.சிவா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

வல்லவான்தேவி, காலஞ்சென்றவர்களான குகநேசபாலன், பரிமளாதேவி மற்றும் சரோஜினிதேவி, சந்திராதேவி, சிவபாலன், விமலாதேவி, உதயபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

காலஞ்சென்ற சிவசிதம்பரம் மற்றும் ராஜலட்சுமி (ஈஸ்வரி), உதயலட்சுமி (செந்துரு), சரோஜினிதேவி (கிளி), புஷ்பலதா (லதா) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

காலஞ்சென்ற திரவியம், தெய்வேந்திரம்பிள்ளை (JP - சமாதான நீதவான்) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

காலஞ்சென்றவர்களான குலசிங்கம், தியாகராஜா மற்றும் அமுதலிங்கம், சிவசேகரம், சிவா ஆகியோரின் அன்பு சகலனும்,

கமலாதேவி, வசந்தி, ஜமுனா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் அவார்.

***அன்னாரின் இறுதிக்கிரியை 07-07-2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 08:00 மணியளவில் வவுனியா சாஸ்திரி கூளாங்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, அதனைத்தொடர்ந்து ந.ப 12:00 மணியளவில் நெடுங்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு பின்னர் பி.ப 02:30 மணியளவில் ஊஞ்சால்கட்டி குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும்.***

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**
**சுகிதா (மகள்): (416) 561-4162**
**செந்தூரன் (மகன்): (416) 662-8940**
**செந்திலன் (மகன்): 94770657457**
**துர்க்கா (மகள்): 94773727547**
**சிவா (சகோதரன்): (647) 823-9633**

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# ஆயுதப் போராட்ட அமைப்புகளாக எமது போராட்டப் பாதை மாறுபட்ட தடத்தில் சென்றபோதும் கூட சம்பந்தன் அவருடனான நட்புறவு என்றும் தொடர்ந்திருந்தது

## இரா. சம்பந்தன் அவர்களின் மறைவு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் இரங்கல் செய்தி



தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா. சம்பந்தன் அவர்களின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த சம்பந்தன் அவர்கள், தந்தை செல்வா அவர்கள் முதல் இன்றைய தலைமுறையினர் வரை அனைத்துக் காலங்களிலும் கை கோர்த்துப் பயணித்த ஒரு தலைவராக திகழ்ந்தவர்.

தேர்தல் அரசியலில் ஈடுபடும் வாய்ப்புகள் பல தடவைகள் தந்தை செல்வா அவர்கள் மூலம் கிடைக்கப் பெற்றபோதும் அவற்றைத் தவிர்த்து வந்த அதேநேரம், தமிழ் மக்களால் நடாத்தப்பட்ட அறவழிப் போராட்டங்கள் பலவற்றிலும் முன்னின்று போராடியிருந்தார்.

1961 ஆம் ஆண்டில் எனது தந்தையார் உள்ளிட்ட பல தமிழரசுக்கட்சித் தலைவர்களின் பங்குபற்றுதலுடன், தந்தை செல்வா அவர்களின் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திலேயே சம்பந்தன் அவர்களுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு முதல் முதலாக எனக்கு கிடைத்தது. எனது தந்தையாருடன் அவருக்கிருந்த பலமான நட்புறவு காரணமாக எனக்கும் அவருக்குமான உறவு அன்றைய நாள் தொட்டு சிறப்பானதாகவே அமைந்திருந்தது.

ஆயுதப் போராட்ட அமைப்புகளாக எமது போராட்டப் பாதை மாறுபட்ட தடத்தில் சென்றபோதும் கூட அவருடனான நட்புறவு என்றும் தொடர்ந்திருந்தது.

1985 ஆம் ஆண்டு பூட்டான் தேசத்து திம்பு நகரில் தமிழ் அமைப்புகளுக்கும் சிறீலங்கா அரசிற்கும் இடையே நடைபெற்ற முதலாவது பேச்சுவார்த்தையின் போது, இராஜதந்திர ரீதியிலான பேச்சுக்களில் வெளிப்படுத்த வேண்டிய ஆளுமை நிறைந்த அணுகுமுறைகள் பற்றி அவரிடம் இருந்து பல்வேறு ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதை இன்று நினைத்துப் பார்க்கிறேன்.

அத்தகைய அவரது திறமை மற்றும் பண்பு, பின்வந்த காலங்களில், குறிப்பாக யுத்தத்தின் பின்னர் தமிழ்ச் சமூகத்தின் குரலாக, தென்னிலங்கை சமூகம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அவர் அங்கீகாரம் பெற காரணமாயின.

தான் வரிந்து கொண்ட கொள்கைக்காக, எதிரிகளும் நிராகரிக்க முடியாத வகையில், ஆணித்தரமாக ஆளுமை நிறைந்த வகையில் வாதங்களை முன்வைப்பதற்கு அவர் என்றைக்கும் தயக்கம் காட்டியதில்லை. சக நாடாளுமன்ற உறுப்பினராக பல தடவைகளில் நான் அதனை கண்டுணர்ந்திருக்கிறேன்.

பொது வெளியிலும், ஊடகங்களுடனான செவ்விகளிலும் கருத்துகளை வெளிப்படுத்தும்போது, நிதானமான அவருடைய சொல்லாடல்கள் மற்றும் கருத்துப் பகிர்வுகள், அரசியல் பரப்பில் இயங்குகின்ற அனைவரும் அறிந்துகொள்ள வேண்டிய முன்னுதாரணமான பண்பாகும்.

எவருடனும் சரி, எக்காலத்திலும் சரி, பேச்சுக்களை முன்னெடுக்கும்போது, பேச்சுக்கள் முடிவுக்கு அல்லது முறிவுக்கு வரும்வரை நம்பிக்கையுடன் பயணிப்பதே தலைமைத்துவத்தின் பண்பாக இருக்க வேண்டும் எனக்கூறி, அதனை உறுதியாக கடைப்பிடித்ததன் காரணமாக பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு முகம் கொடுத்திருந்தார்.

தனது வாழ்வின் இறுதிவரை, தந்தை செல்வா முன்மொழிந்த சமஷ்டித் தீர்வுக் கொள்கையில் பற்றுக்கொண்டு, பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வைப் பெற முயற்சித்த சம்பந்தன் அவர்களின் மறைவு தமிழினத்திற்கும் தேசிய இனப் பிரச்சினை இந்த நாட்டில் இன்னமும் உண்டு என நம்புகின்ற சிங்கள முஸ்லீம் சமூக சக்திகளுக்கும் கவலையை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் உச்சம் பெற்றுவிட்ட வேளையில், அதன் பிளவை தடுக்க முடியாதா எனும் கவலையுடனும் காணப்பட்ட அவர், கட்சிக்குள் தனக்கிருந்த அதிகாரங்களைக் கொண்டு அவசியமான கருமங்களை ஆற்றி, முன்னமே கூட்டமைப்பின் முரண்பாடுகளை சீர் செய்து பிளவினைத் தடுக்கத் தவறியிருந்தமை அவரது நீண்ட அரசியல் வாழ்வின் இறுதிக் காலங்களை கறைபடிந்ததாக்கி விட்டமை துயர் தரும் விடயமாகியுள்ளது.

அவரது நீண்டகால வாழ்வின் அடிப்படையான அரசியல் அபிலாசைகள், கனவுகள் மெய்ப்பட வேண்டுமெனில், அதற்கான பயணத்தில், சக தமிழ் அமைப்புகளுடன் இணைந்து பயணிக்க அவர் வழி நடாத்திய தமிழரசுக் கட்சிஇ இன்று தங்களுக்குள் இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டு முன்வருவதே அவருக்கான ஆழமான அஞ்சலியாக இருக்க முடியும்.அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர்கள், ஆதரவாளர்களுக்கு எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மலிங்கம் சித்தார்த்தன் பா.உ.,
தலைவர்
ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) - 01.07.2024

## இவ்வார ராசிபலன்


(24 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும் வாரம். எடுத்த தொழில் முயற்சியில் வெற்றி உண்டாகும். உள்ளம் மகிழும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றி தரும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. கல்வியில் மேன்மைகள் உண்டாகும். துயரம் இல்லாத உயரங்களை சந்திப்பீர்கள். முன்னோர்கள் ஆசீர்வாதம் உண்டு. முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்தி தேடி வரும். பாராட்டுக்கள் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். வாகன மாற்றம் ஏற்படும். கடன்சுமை குறையும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வளமான சிந்தனை உதயமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். தீமைகள் விலகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். பெண்களுக்கு பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொழில் வளர்ச்சி பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். அவமானங்கள் அகலும். உதவிகள் கிடைக்கும். வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Z




**மகரம்:** கர்ஜனையோடு வலம் வரும் வாரம். பிரிந்த கணவன், மனைவி ஒன்று சேர்வார்கள். பெற்றோர்கள் உதவி கிடைக்கும். விவேகம் வெற்றி தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்களால் ஏற்றம் பெருகும். உடல்பொலிவு கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். கல்வியில் கவனம் தேவை. பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் தொடரும். வெளிவட்டாரத் தொடர்பு பெருகும். வேண்டாத நபர்கள் விலகுவர். வினைகள் அகலும். புதுமைகள் நிறைந்த காலம். நல்லச்செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகம் உண்டு. மன உற்சாகம் களை கட்டும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் கூடும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். பொருள் வரவு இருக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் சற்று கவனம் தேவை. நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஈசான்ய லிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** மாங்கல்ய பாக்கியம் அமையும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். காரிய வெற்றி கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப குழப்பங்கள் அகலும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும். பணவரவு திருப்தி தரும். குடும்ப குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். சகோதர ஒற்றுமை உண்டு. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய தொழில் அமையும். பெருமைகள் சேரும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். பயணம் அனுகூலம் தரும். மனம் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் வாயில் தேடி வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். ஆண்களின் அதிகாரம் உயரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். சுப விரயம் உண்டு. குடும்ப மேன்மைகள் உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வைகுண்ட நாதர், அதிர்ஷ்ட எண்: 9,7,5,4
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**மீனம்:** இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கும் வாரம். உண்மைகள் வெளிப்படும். உறவுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மன நிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். பணியில் பாராட்டுக் கிட்டும். சிக்கனத்தை கையாள வேண்டும். பொறுப்புக்கள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். அணிகலன்கள் சேர்க்கை ஏற்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். வரவுகள் திருப்தி தரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைககள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு ஆபரணம் சேரும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெருமைகள் கூடும். செல்வாக்கு உயரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். நல்லச் செய்திகள் நாடி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் பிடிப்பு ஏற்படும். முயற்சிகளில் வளர்ச்சியடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். தொழில் ரகசியம் காப்பது நல்லது. உறவினர்களிடம் சஞ்சலம் ஏற்பட்டு மறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 7,4,1,2
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
Subramaniam
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages




இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.






26 years of publishing
www.uthayannews.ca

UTHAYAN

# உதயன்

உதயம் 1474 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 5, 2024


## கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள கனடா உதயன் ஆசிரிய பீடம்




கனடிய தமிழர் பேரவையின் புதிய தலைவராக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள குமார் இரத்தினம் அவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள கனடா உதயன் ஆசிரிய பீடம் அவரிடத்தில் சில வேண்டுகோள்களையும் விடுத்துள்ளது

மேற்படி கடிதத்தில் கனடா உதயன் ஆசிரிய பீடம் பின்வருமாறு வேண்டுகோள்களையும் விடுத்துள்ளது

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

## தமிழரசினை அழித்து தான் சார்ந்தவர்களை வாழவைத்த தலைவர் இரா.சம்பந்தன்



“தனது அரசியல் அனுபவம், சட்டப்புலமை, ஆளுமை என்பவற்றைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய எதனையும் பெற்றுக் கொடுக்காது, தமிழ் மக்களை மீண்டும் எதிர்பார்ப்பில் ஆழ்த்திச்சென்ற தலைவர்”

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தன் கடந்த 30.06.2024 அன்று இயற்கை எய்தினார். பொதுவாக ஒருவர் இயற்கை எய்திவிட்டால் அவர் தொடர்பில் இரங்கல் தெரிவிப்பது தமிழர் நம் பண்பாடு. எனினும் உண்மையைக் கடந்து நாம் புகழாரம் சூட்டுவது எற்புடையது அல்ல.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

## பாரிஸ் நகரில் நடைபெற்ற பவானியின் “வியன்களம்” “கொற்றவை” நூல்களின் அறிமுக விழா



09.06.2024 அன்று ஞாயிறுக்கிழமை கனடா வாழ் கவிஞர் பவானி தர்மகுலசிங்கம் அவர்களது “வியன்களம்” நூல், மற்றும் கொற்றவைப் பாடல்கள் தொகுப்பு இறுவெட்டு அறிமுகவிழா பிரான்ஸ் தலைநகர் பரிஸில் மாலை இடம்பெற்றது.

பேச்சாளர் திரு. அமிர்தநாயகம் சத்தியநாதன் அவர்கள் நிகழ்வைத் தொகுத்து வழங்கச் சுடரேற்றல், அகவணக்கத்தைத் தொடர்ந்து, சிறுமி இமையாவின் தேவாரம், இசை ஆசிரியர் தேவராஜா அவர்களது மாணவிகளின் தமிழ்த்தாய் வாழ்த்து, என்பன இசைக்கப்பட்டன முன்னிலை உரையைத் தமிழ் விரிவுரையாளர் யசோதா தர்மலிங்கம் அவர்களும், அறிமுக உரையை ஊடகவியலாளர் அனுசுயா ஆனந்தரூபன் அவர்களும் வழங்கியிருந்தனர்.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் – கனடா நடத்திய 22வது வருட நிதிசேர் நடை




கடந்த ஜூன் 29, 2024 சனிக்கிழமை அன்று யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடத்திய 22வது வருட நிதிசேர் நடை **(Walk-A-Thon)** சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது. மேற்படி நடை பயணத்தை **Heart & Stroke Foundation க்காக Morningside Park** இல் நடத்தி அதுவரை சேகரித்த 11,270.00 டாலர்கள் நிதியை அந்த அமைப்பினருக்கு வழங்கியிருந்தார்கள். இந்த நற்காரியத்திற்கு தங்கள் நிதியை வழங்கிய அனைவருக்கும் யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நன்றியைத் தெரிவிக்கின்றது.

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

## இரா சம்பந்தனின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ச.குகதாசன் நாடாளுமன்ற நியமனம்



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் மறைவினால் ஏற்பட்ட திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு சண்முகம் குகதாசனின் பெயர் வர்த்தமானியில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது

ச.குகதாசன் 2020 பொதுத் தேர்தலில் 16,770 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பதும் இவர் கனடாவில் பல வருடங்கள் வாழ்ந்து பல சமூக மற்றும் அரசியல் செயற்பாடுகளில் முன்னணியில் திகழ்ந்தார் என்பதும் பின்னர் தாயகம் சென்று இரா. சம்பந்தன் அவர்களோடு இணைந்து அவருககு செயலாளராகவும் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 8ம் பக்கம்)